# கேளீர்

Vol 15 - Issue 10- October 2022

FRIENDS MISSIONARY PRAYER BAND — for young — friends of fmpb — A monthly Prayer Bulletin for Youth & Teens

அடிப்படை மூல சத்தியம் **10**

**அக்கினிக் கடல்**



# அக்கினிக்கடல்

Private Circulation only

# எந்த தீர்ப்பை எதிர்பார்க்கிறாய் ?

நீதிமன்றத்தில் தீர்ப்புகள் சொல்லப்படுகின்றன. நீதிபதி சொல்லும் தீர்ப்பு ஒருவருக்குச் சாதகமாகவும் இன்னொருவருக்கு எதிராகவும் தீர்ப்பளிக்கப் படுகின்றன. இந்தத் தீர்ப்பில் நீதியும் நியாயமும் இருக்கும், இல்லாமலுமிருக்கும். ஆனால் நம் அனைவருக்கும் உலகத்தின் முடிவில் ஒரு தீர்ப்பு உண்டு. அதுவே இறுதியான தீர்ப்பு. அதில் தீர்ப்பளிக்கிறவர் ராஜாதி ராஜாவாகிய கர்த்தர். அவர் தீர்ப்பில் அநீதி இருக்காது. அது நீதியுள்ள தீர்ப்பாக இருக்கும்.

மத் 25:31-46 வரையுள்ள வேதப்பகுதியில் இரண்டு வகையான ஆடுகளுண்டு, இரண்டு பக்கங்கள் என்ற இரண்டு வகையான தீர்ப்பு நிகழப் போகிறதை ஓர் உரையாடலைப் போல பார்க்கிறோம். செம்மறி ஆடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் பிரித்து நிறுத்துகிறார். வலது பக்கத்திலுள்ளவர்களுக்கு நித்திய ஜீவன் என்றும், இடது பக்கத்திலுள்ளவர்களுக்கு நித்திய ஆக்கினை என்றும் தீர்ப்பளிக்கிறார். இப்பொழுது நம் மனதில் ஒரு கேள்வி வரும் நான் செம்மறி ஆடா? அல்லது வெள்ளாடா? நான் எந்தப் பக்கத்தில் நிற்கப் போகிறேன்? வலது பக்கமா அல்லது இடது பக்கமா நிற்பது நம்முடைய தெரிந்தெடுப்பில் தான் இருக்கிறது.

நாம் உலகத்தில் வாழும் நாட்களில், நமக்குரியதைத் தெரிந்தெடுக்கும் உரிமையைக் கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிறார். சரியானதையும், தவறானதையும் தெரிந்தெடுக்கும் சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் உண்டு. 18 வயது நிரம்பிய ஒரு வாலிபர் எனக்கு என் வாழ்க்கையில் எப்படி செய்ய வேண்டும், எதைச் செய்ய வேண்டும் என்று முடிவெடுக்கும் வயது வந்துவிட்டது என்று தன் பெற்றோர்களிடம் கூறுகிறார். என் சுதந்திரம், என் முடிவு என்று தவறாக முடிவெடுக்கும் வாலிபர்களின் முடிவு பரிதாபமாயிருக்கிறது.

கர்த்தர் தமது வலது பக்கத்தில் நிற்பவர்களுக்கு நித்திய ஜீவனையும், இடது பக்கத்தில் நிற்பவர்களுக்கு நித்திய ஆக்கினையையும் தீர்ப்பாக அளிக்கிறார் (வசனம் 34,41,46). கர்த்தருடைய தீர்ப்பு இரண்டு பேருக்கும், இரண்டுவிதமாகக் கூறப்படுகிறது. காரணத்தைக் கவனித்து பார்த்தால் வலது பக்கத்தில் நிற்பவர்கள் தங்கள் வாழ்வில் நன்மையைச் செய்தவர்கள்(வசனம் 40). இடதுபக்கத்தில் நிற்பவர்கள் நன்மை இன்னதென்று அறியாமல் வாழ்ந்தவர்கள்(வசனம் 45) இரண்டு பேருக்கும் ஒரே வகையான வாய்ப்புகளே கொடுக்கப்படுகின்றன. ஆனால் அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தியதால் நித்திய ஜீவனும், வாய்ப்புகள் பயன்படுத்தாமல் போனதினால் நித்திய ஆக்கினையும் அடைவதைக் காண்கிறோம்.

அருமையான தம்பி, தங்கச்சி உன் வாழ்வில் நீ எதைத் தெரிந்தெடுத்திருக்கிறாய்? கர்த்தர் உனக்குத் தந்திருக்கிற வாலிப நாட்களில் எதை விரும்பி செய்து கொண்டிருக்கிறாய்? பிரசங்கி 11:9ல் "வாலிபனே உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும். உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி". உனக்கு நன்றாகப் புரியும் படியாகவே இவ்வேதவசனம் காணப்படுகிறது. நம் கர்த்தர் நல்ல மேய்ப்பர். உன்னை இரட்சிக்கும் படியாகவே உலகத்திற்கு வந்தார். இப்போதும் உனக்கு வாய்ப்புகளைத் தருகிறார். நீ எந்த நிலையில் இருக்கிறாய் என்பதை உணர்ந்து அவரிடம் வந்துவிடு. உன் வாழ்வு கிறிஸ்துவுக்காக வாழும் வாழ்வாகட்டும். கர்த்தருடைய வலது பக்கத்தில் நிற்கும் தீர்ப்பே உனக்குக் கிடைக்கட்டும்.

நீயுனக்கு சொந்தமல்லவே; மீட்கப்பட்ட பாவி
நீயுனக்குச் சொந்தமல்லவே
நீயுனக்கு சொந்தமல்லவே
நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம்

பழைய பாவத்தாசை வருகுதோ?
பசாசின் மேலே பட்சமுனக்குத் திரும்ப வருகுதோ?
அழியும் நிமித் தாசை காட்டியே
அக்கினிக்கடல் தள்ளுவானேன்?



Mrs. Sheela Daniel

## கேரீத்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

## Vision

*To reach the spheres of India and to imbibe the heavenly manna to our youth, who are the future pillars of 'our Nation'.*

எல்லைகள் கடந்து நம் எதிர் கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரம மன்னாவை விதைக்க.
சிந்தனைக் கூர் கொண்டு இந்தியம் மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

## Objective

*A monthly magazine to strengthen the Prayer Cells...*

ஜெபக்குழுவை வலுப்படுத்தும் மாத இதழ்

## Produced, Layout & Design by


fmpb youth & teens wing

www.fmpbyouth.org
Kerithmagazine@gmail.com

Youth & Teens Wing
29,High School Road
Ambattur,Chennai-53
Ph :044-26570404 Extn 266

fmpb youth wing

தனிப்பிரதி ரூ.25/-
ஆண்டு சந்தா ரூ.250/-

சந்தா மற்றும் முகவரி மாற்றத்திற்கு கூப்பிடுங்க
Cell : 9445040148
PH : 044 26570404


### ஜெபக்குழு தலைவர்களுக்கு...

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும் ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழின் செய்திகளும் ஜெபக்குறிப்புகளும் நான்கு வாரங்களாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. நான்கு வார ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம்.
ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றைத் தனியாக எடுத்து ஜெபநேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனைய பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்துபடிக்கச்சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களைமாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

---

தொடர் ஜெபத்திற்கு
அறைகூவல்
பயன்படுத்தவும்

கிறிஸ்துவில் பிரியமான கேரீத் அன்பர்களுக்கு,
சர்வத்தையும் ஆளுகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

வில்லியம் பூத் (Salvation army founder) ஓர் தரிசனத்தை காண்கிறார். ஒரு இருண்ட புயல் கரு மேகங்கள் நிறைந்த கடலில் எண்ணற்ற மனிதர்கள் முழ்கி மிதப்பத்தையும், கூச்சலிடுவதையும் அலறுவதையும் பார்த்தேன். இந்த இருண்ட கோபமான கடலில் ஒரு வலிமையான பாறை உயர்ந்து நிற்பதையும் அதன் அடியில் ஒரு பரந்த மேடையும் அந்த மேடைக்கு பல பேர் போராடி ஏறி தப்புவதையும் பார்த்தேன். ஆனால் இப்படி தப்பி ஏறினவர்கள் தாங்கள் தப்பின அந்த கோபமான கடலில் தப்புவதற்கு போராடி கொண்டிருந்தவர்களை பற்றி சிறிதேனும் அக்கறையற்றவர்களாய், பொறுப்பவற்றவர்களாய் இருப்பதை பார்த்து மிகவும் கவலை அடைந்தேன். ஆனால் சிலர் மாத்திரம் தப்புவதற்கு போராடினவர்களை மீட்பதில் தங்களை அர்ப்பணித்தனர்.

நரக ஆக்கினையில் இருந்து நாம் தப்புவதற்கு கிறிஸ்துவை பற்றிக்கொண்டோம். கிறிஸ்து இல்லாமல் நரகத்திற்கு நேராக பயணிக்கிற நம் தேசத்தின் மக்களுக்கு நாம் என்ன செய்யப்போகிறோம்? வேதவசனத்தின்படி வாழ்ந்து வாழ்வு கொடுக்கும் வசனத்தை பறைசாற்றுவோம். உலக மாயையில் சிக்கி சிதறி தன் வாழ்வை இழந்து தவிக்கும் வாலிப உள்ளங்களை மீட்டெடுக்கும் உன்னத ஊழியத்தின் மூலம் திரளான வாலிபர்களை அக்னிக்கடலில் இருந்து மீட்டெடுக்க நம்மை அர்ப்பணிப்போமா?

செப்டம்பர் மாதத்தில் திருவள்ளூர் மண்டல வாலிப தலைவர்களுடன் நடந்த சிறப்பு திட்டகூடுகையில், இந்த மாவட்டம் ஜெபித்து தாங்கும் உத்திரப்பிரதேசம் மற்றும் உத்தர்காண்ட் மாநிலத்தில் அமைந்துள்ள 88 மாவட்டங்களுக்காக 88 வாலிப ஜெபக்குழுவை வாலிபர்கள் மத்தியில் உருவாக்க தீர்மானித்ததற்காக கர்த்தரை துதிக்கிறேன். இவ்வண்ணமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஜெபிக்க கொடுத்த மாநிலங்களுக்காக ஜெபக்குழுவை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளுங்கள்.

நமது இயக்கத்தின் வாலிபர் பிரிவு தொடங்கி 50 ஆண்டுகளானதால் பொன்விழா ஆண்டாக நினைவுகூர்ந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்துவதற்காக, வரும் 2023 ஜனவரி 14,15,16 ஆகிய மூன்று நாட்கள் வாலிபர் முகாம் நடத்த தீர்மானித்துள்ளோம். வாலிபர்கள் அணியணியாய் எழும்பி பாரத் தேசத்தின் எல்லையெங்கிலும் சென்றிட எங்களுடன் கரம் கோர்க்க வாரீர் என்று இருக்கரம் கூப்பி அழைக்கிறேன். கிறிஸ்து மகிமையடையட்டும், கிறிஸ்துவினால் உங்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்படட்டும்.

கிறிஸ்துவின் உன்னதப்பணியில்,
**Rev. J. டேனியேல் அருள்மணி**

# இந்திய திருச்சபை வரலாறு



**இந்தியாவில் சீர்திருத்த திருச்சபையின் அருட்பணிகள்:**

இந்தியாவில் இயேசு சங்கத்தினரின் அருட்பணி காலத்தில் கி.பி 18ம் நூற்றாண்டில் தான் முதன்முதலில் சீர்திருத்த திருச்சபையின் அருட்பணி, இந்தியாவில் தமிழ்நாட்டில் தொடங்கியது. 17ம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியர் இந்தியாவில் தமது வாணிப தலங்களை நிறுவினர். இவர்களுக்குப் பின்பு டச்சுக்காரர், பழவேற்காடு, நாகப்பட்டினம் ஆகிய இடங்களிலும், ஆங்கிலேயர் மசூலிப்பட்டினம், சென்னை, கடலூர் ஆகிய இடங்களிலும், பிரான்ஸ் நாட்டினர் புதுச்சேரி, காரைக்காலிலும், டென்மார்க் நாட்டினர் தஞ்சாவூர், தரங்கம்பாடி, கல்கத்தா ஆகிய இடங்களிலும், தங்கள் வாணிபத் தலங்களை அமைத்தனர். இவர்கள் அனைவரும் சீர்திருத்தச் சபையைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். இவர்களது ஒரே குறிக்கோள் திரண்ட செல்வத்தைத் தேட வேண்டும் என்பதே. அல்லாமல், நற்செய்தி அருட்பணியில் ஆர்வம் காட்டவில்லை. கி.பி 16ம் நூற்றாண்டில் மார்ட்டின் லூத்தரின் சீர்திருத்தக் கொள்கை பல்வேறு நாடுகளில் பற்றி பரவிச் சென்றாலும், ரோமன் கத்தோலிக்கச் சபைகளுக்கும், சீர்திருத்தச் சபைகளுக்கும் பல்வேறு போராட்டங்கள் இருந்தபடியால், சீர்திருத்தச் சபைகள் நற்செய்தி அருட்பணியில் ஆர்வங்காட்ட இயலவில்லை.

டென்மார்க்கில் நான்காம் பிரட்ரீக் என்பவர் லூத்தரேனியர் நற்செய்தி அறிவிக்கும் ஆர்வமுடையவர். இவர் இந்தியாவில் தன் ஆதிக்கத்தில் உள்ள காலனி பகுதியில் கிறிஸ்தவ சமய அருட்பணி ஆற்ற, தகுதியான இருவரை அனுப்ப வேண்டும் என்று ஜெர்மனியில் உள்ள ஹல்லே பல்கலைக் கழக முதல்வரும் தனது நண்பரான ஏ.எச். பிராங்கே அவர்களை அணுகியபோது, தனது பல்கலைகழகத்தில் பட்டம் பெற்ற பர்த்தலோமேயு சீகன் பால்க், ஹன்றி புளிச்சாவ் ஆகிய இருவரை அரசனிடம் அனுப்பவே அரசனின் ஆணைக்கிணங்க 1708ம் ஆண்டு ஜூலை திங்கள் 9ம் நாள் இந்தியா வந்து சேர்ந்தனர்.

**பர்த்தலோமேயு சீகன் பால்க் (இளமைப்பருவம்)**

சீகன் பால்க் 1682 ஜீன் 10ம் நாள் ஜெர்மனி நாட்டில் புல்ஸ்கிட் என்னும் கிராமத்தில் பிறந்தார். இவருக்கு நான்கு சகோதரிகள் உண்டு. தகப்பனார் பர்த்தலோமேயு ஒரு தானிய வியாபாரி, தாயார் ஒரு பக்தியுள்ள மாது. சிறுவயதிலேயே சீகன்பால்க் லத்தீன் மொழியைக் கற்று அறிந்தவர். இவருக்கு ஆறு வயது இருக்கும் போது, இவருடைய தாயார் கேத்ரின் வியாதிப்பட்டு இறந்தார். இறக்கும் தருவாயில் கட்டிலில் சுற்றி நின்ற தன் மக்களிடம், என் மக்களே, நான் உங்களுக்கு மகா பெரிய திரவியம் சேர்த்து வைத்திருக்கிறேன். அதை இந்த வேதபுத்தகத்திலே தேடுங்கள் என்று சொல்லி, அதைச் சிறுவன் சீகனிடம் கொடுத்து விட்டு மரித்தார். இதை ஒருபோதும் மறவாமல் பின் நாட்களில் சீகன் அருட்பணிக்குத் தன்னை ஒப்புக்கொடுத்திருந்தார். அதன்பின்பு சில காலத்திலே அவருடைய தந்தை பர்த்தலோமேயு வியாதிப்பட்டு இறந்தார். அவர் தன் மரணம் சீக்கிரம் இருக்கும் என்று எண்ணி, தனக்கு ஒரு சவப்பெட்டியும் ஆயத்தம் செய்து வைத்திருந்தார். ஒருமுறை அவரது வீடு தீப்பற்றி எரியவே உதவிக்கு வந்தவர்கள் வியாதிப்பட்டிருந்த இவரை வெளி கொண்டு போக முயற்சிக்கையில், விரைவில் அவரை வைத்து சுமந்து செல்வதற்கு வாய்ப்பான வேறொரு பொருளும் அகப்படாமையால் அங்கிருந்த சவப்பெட்டியிலே அவரைக் கிடத்தி தீயினின்று தப்புவித்து வெளியே கொண்டுவந்தனர். ஆனால் வெளியே கொண்டு வந்து பார்த்த பொழுது, அவருடைய ஆவி பிரிந்து இறந்திருந்தார். சீகன்பால் தன் பெற்றோரைச் சிறுவயதிலேயே இழந்தபடியினால் தன் மூத்த சகோதரியின் ஆதரவில் பராமரிக்கப்பட்டு, பக்தி மார்க்கத்தில் வளர்ந்தார். அக்காலத்தில் ஜெர்மனி நாட்டில் பெரும் புகழ் பெற்ற ஏ. எச். பிராங்கே என்ற இறையியல் மேதாவியுடன் சீகன்பால்குக்கு நட்பு கிடைத்தது. பிராங்கே 17ம் நூற்றாண்டில் தோன்றிய பக்தி இயக்கத்தைத் தோற்றுவித்தவர். ஹல்லே பல்கலைக்கழக முதல்வருமாவார். எனவே சீகன்பால்க்கும், அவரது நண்பரும் இப்பல்கலைக்கழகத்தில் சரித்திரமும் பின்பு இறையியலும் கற்று நல்ல இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வந்தவர்கள். எனவே இந்தியாவுக்கு மிஷனெரி அருட்பணியாற்ற தகுதியானவர். இவர்களே சிறந்தவர் என ஏ.எச். பிராங்கே எண்ணி, இவ்விருவரையும் அரசனுக்குச் சிபாரிசு செய்து பின்பு இந்தியாவுக்கு மிஷனெரியாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

**சீகன்பால்கின் இந்திய அருட்பணி:**

சீகன்பால்க் இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டில் தரங்கம்பாடியை அடைந்து, தமிழறிஞர் உதவியைக் கொண்டு, தமிழில் பேசவும், எழுதவும் கற்றுக்கொண்டார். சீகன்பால்க் எழுதிய முதல் தமிழ் உரை ''வேத உபதேச வினாவிடையாகும்'' பின்பு அருளுரைகள், கைப்பிரதிகள் ஆகியவற்றையும் எழுதினார். இந்தியா வந்து, இரண்டு ஆண்டிற்குள் புதிய ஏற்பாடு முழுவதையும் தமிழில் மொழிபெயர்த்திருந்தார். 1712ஆம் ஆண்டு ஐரோப்பாவிலிருந்து நன்கொடையாக ஓர் அச்சிடும் ஏந்திரம் ஒன்றை வாங்கி, அதில் முதன்முதலில் புதிய ஏற்பாட்டை அச்சிட்டு வெளியிட்டார். மேலும் பழைய ஏற்பாட்டிலும் ரூத்தின் புஸ்தகம் வரை மொழிபெயர்த்து வைத்தார். அத்துடன் தென் இந்தியாவிலுள்ள இந்து சமயத்தை ஆராய்ச்சிபண்ணி, தமது முடிவுகளை ஜெர்மானிய மொழிகளில் எழுதினார், மற்றும் பல தமிழ்ப் பாடப் புத்தகங்களையும் எழுதினார். இவரது அருட்பணியுடன் தமிழ் இலக்கியச் சேவையும் இன்றும் நிலைத்திருக்கிறது.

## அருட்பணியின் இன்னல்கள்:

இவரது அருட்பணியில் இன்னல்கள் இல்லாமல் இல்லை. டென்மார்க் படைத்தலைவரான கசியஸ் மூலம் இவருக்குப் பேரிடர் தோன்றியது. கசியஸ் உண்மையாக நற்செய்தி அருட்பணியை விரும்பவில்லை. அத்துடன் மினெரிகளை மிகவும் கொடூரமாக நடத்தினார். 1708ஆம் ஆண்டு சீகன்பால்க் ஒரு விதவைக்கு நியாயம் கிடைக்க மனு செய்த போது, இம்மனுவைக் கண்டு கோபம் கொண்ட கசியஸ், சீகன்பால்க்கைக் கைது செய்து ஒருமாத காலம் சிறையில் அடைத்து வைத்தார். அத்துடன் புளுச்சாவும், சபையினரும் சீகனுக்கு உதவியபடியால் அவர்களும் துன்புறுத்தப்பட்டனர். இதனால் பொதுமக்கள், கசியஸ் வரம்பு மீறி நடப்பதாகப் பொங்கி எழுந்தனர். மேலும் இச்சம்பவத்தைச் சீகன்பால்க் டென்மார்க் அரசனுக்கு எழுதிய கடிமும் அரசனிடம் போய்ச் சேராதபடிக்குத் தடைசெய்து வைத்தார். அதன்பின்பு அருட்பணியாற்றிய கடிதம் மட்டுமே அரசிடம் கிடைக்கப்பெற்று இக்கடிதத்திற்குப் பின்பு டென்மார்க் அரசன் மீண்டும் மூன்று புதிய மினெரிகளையும், அத்துடன் அருட்பணிக்குத் தேவையான பெரும்பொருளையும், செல்வங்களையும் அனுப்பி வைத்தார். இச்செல்வத்தின் மூலம் தரங்கம்பாடியில் மின் வீட்டையும் அதைச் சுற்றியுள்ள கோட்டையையும் வாங்கினார்கள். இதன் மூலம் பள்ளிக்கூடம் ஒன்று உருவாக்கப்பட்டது.

## அருட்பணியின் அபிவிருத்தி:

இவர்களது ஊழியம் இங்கிலாந்து தேசம் வரையிலும் எட்டியது. இங்கிலாந்தில் உள்ள கிறிஸ்தவ அறிவு அபிவிருத்தி சங்கம்(SPCK) இவர்களோடு சேர்ந்து நற்செய்தி அறிவிக்கவும் திருப்பணியாளர்களை நேரடியாக அனுப்பாவிட்டாலும், பண உதவி செய்தார்கள். அத்துடன் அச்சு இயந்திரம் வாங்க இச்சங்கமே முழு உதவியும் செய்தது. இதன் மூலம் இவ்வச்சியந்திரத்தில் புதிய ஏற்பாட்டை அச்சிட்டு அனைவருக்கும் கிடைக்க உதவி செய்தனர். மேலும் டென்மார்க் அரசனும் அஞ்சல் துறை வருமானத்திலிருந்து ஆண்டுகள் தோறும் 2000டாலர்கள் அருட்பணிக்கு என ஒதுக்கபட்டு, இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு வந்தது.

தரங்கம்பாடியில் புதிதாக கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினவர்களில் கணபதி ஆசிரியர் என்னும் இளைஞர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவர் 1709ம் ஆண்டு திருமுழுக்கு பெற்றார். இவர் சீகன் பால்க் ஆயருக்குத் தமிழ் கற்றுக் கொடுத்த ஆசிரியரின் மகன் ஆவார். இவர் சீகன் பால்க் எழுதிய அநேக நூல்களுக்கும் மொழிபெயர்ப்பதற்குக் காரணமாக இருந்தார். இதன் மூலமே இவர் கிறிஸ்தவ சமயத்தை அறிந்து மனம்மாற்றம் பெற்றார். இதனால் கணபதி ஆசிரியரின் உறவினர்கள் இவரைப் பெரிதும் துன்புறுத்தியும், நஞ்சு கலந்த உணவைக் கொடுத்தும் கொலை செய்ய முற்பட்டனர். தெய்வாதீனமாக உயிர்பிழைத்து கடைசி வரையிலும் அருட்பணிக்கு, உதவியாக இருந்தார். சீகன்பால்கின் ஊழியமானது, தஞ்சாவூர், தரங்கம்பாடி, நாகப்பட்டினம், சென்னை வரையிலும் பற்றி பரவியது. சென்னையில் ஆங்கிலேய ஆயர்கள் சீகன்பால்கை உற்சாகமாக வரவேற்றனர்.

1709ஆம் ஆண்டு சீகன் பால்க் டென்மார்க் போகத் திட்டமிட்டார். ஆனால் படைத்தலைவன் கசியஸ் டென்மார்க் கப்பலில் செல்ல அவருக்கு அனுமதி தர இசையவில்லை. ஆனால் 1714ம் ஆண்டு கசியஸ் / சீகன்பால்க் ஆகிய இருவருக்கும் இருந்த பகைமை மறைந்து கசியஸ் சீகனுடன் நட்பு கொண்டார். அவ்வருடமே சீகன்பால்க் டென்மார்க் சென்று, அங்கே அரசனைக் கண்டு, தரங்கம்பாடி அருட்பணியைக் குறித்து விளக்கினார். அரசன் அவரைத் தரங்கம்பாடி அருட்பணிக்குத் தலைவராக, நியமனம் பண்ணினார். பின்பு சீகன்பால்க் அங்கேயே திருமணம் செய்து கொண்டு இங்கிலாந்து வழியாக இந்தியாவுக்கு 1716ஆம் ஆண்டு மீண்டும் வந்தார். தரங்கம்பாடியில் படைத்தலைவன் கசியஸ் மாற்றப்பட்டு புதிய படைத்தளபதியை அரசன் நியமித்தார். இவர் சீகன்பால்க்கின் அருட்பணிக்குப் பெரும் ஆதரவு அளித்தார்.

## அரும்பி மலரும் சீர்திருத்தச் சபைகள்:

அருட்பணி ஊழியத்திற்குப் புதுயுகம் தோன்றியுள்ளது என்பதை உணர்ந்த சீகன்பால்க்' முதல் வேலையாகத் தரங்கம்பாடியில் புதியதொரு வழிபாட்டு மனை ஒன்றை உருவாக்கி, அதற்கு "புதிய எருசலேம்" என்று அந்த ஆலயத்திற்குப் பெயரிட்டார். அத்துடன் அங்கேயே ஆசிரியர் பயிற்சி பள்ளியும், உபதேசியார் பயிற்சி பள்ளியும் உருவாக்கினார். அந்நாட்களில் இந்தியாவில் ஜாதி துவேஷத்தால் புதிய எருசலேம் தேவாலயத்தில் அந்தந்த ஜாதி வகையாக தனித்தனியே ஆலயத்தில் அமர்த்துவதைக் கண்டித்து, அனைத்து ஜாதியினருக்கும் திருவிருந்தில், சமபந்தி நடத்தி ஜாதி வேறுபாட்டைக் களையச் செய்தார். இந்திய சமுதாயத்தில் முதன்முதலில் அனைத்து ஜாதியினரையும் ஒன்றாக்கி சமபந்தி நடத்தினவர் இவரே.

இந்நிலையில் டென்மார்க்கிலிருந்து அருட்பணி பரிசீலனைச் சங்கத்தலைவர் வென்டா(Went) என்பவர் நியமிக்கபட்டு இந்தியாவில் உள்ள தரங்கம்பாடி அருட்பணியைப் பார்வையிட்டபோது, ஆலயம் கட்டப்படுவதும், மிஷன் வீடுவாங்குவதும், பள்ளி உருவாக்கபட்டதையும் கடுமையாகக் கண்டித்து எதிர்த்தார். அத்துடன் ஏழைகளுக்குத் தர்ம சகாயம் செய்வதையும் எதிர்த்தார். இவருடைய கொள்கை அருட்பணியின் ஆவிக்குரிய ஊழியமாகிய நற்செய்தி மட்டுமே அறிவிக்க வேண்டும் எனக் கருத்துள்ளவராக இருந்தார். இதனால் தரங்கம்பாடி மின் அருட்பணிக்கு வரும் பெரும் உதவியும் நிறுத்தப்பட்டது. இதனால் மனம் நொந்த சீகன்பால்க் வியாதிப்பட்டு 1719ம் ஆண்டு தனது 36ம் வயதிலே காலமானர். சீகன்பால்க் மரணத்திற்குப் பின்பு டென்மார்க் அரசன் வென்டா செயலை அறிந்தபோது, அவரை அருட்பணி பரிசீலனைச் சங்கத்திலிருந்து விலக்கி வேறு ஒருவரை நியமனம் பண்ணினார். இவர் தரங்கம்பாடி அருட்பணி வளர்ச்சிக்குப் பெரும் உதவியாய் இருந்தார்

தொடரும்.

**Rev.A.G தனபால்ராஜ்**

நல்மேய்பர் ஆலயம், நங்கநல்லூர், சென்னை





# இயேசு நியாதிபதியா?

இந்த மாத நான்கு வார செய்திகளும் மூன்று நபர்களின் சந்திப்பாகவும், அவர்களின் உரையாடல்களாக சொல்ல வேண்டிய அடிப்படை மூல சத்தியத்தை நாம் கற்றுக்கொள்ளவிருக்கிறோம்.

இந்த உரையாடலில் வரும் முதல் நபர் சத்திய வாசகன். இவர் வேத வசனங்களை மேற்கோள் காட்டி ஆழமான சத்தியத்தை சத்தியமாக போதிக்கும் நபர். மேலும் அடுத்து வரும் இரண்டு நபர்களில் ஒரு நபர் ஆலயப்பிரியன்; இவர் தவறாமல் ஞாயிற்றுக்கிழமைகளிலும், மற்றும் சிறப்பு ஆராதனைகளிலும் ஆலயம் செல்பவர்; மேலும் ஆலயப் பண்டிகைகளை விமரிசையாகக் கொண்டாடுபவர்; ஆனால் ஆசீர்வாதத்தின் பகுதியாக அவர் கேட்ட ஆயிரம் செய்திகளின் மத்தியில் நரகத்தை குறித்தோ, அக்கினிக் கடலைக் குறித்தோ ஒரு செய்தியும் கேட்க முடியாமல் போனவர். ஆனால் பரலோகத்தைக் குறித்து நன்கு அறிந்தவர். இரக்கமுள்ள தேவன் சிறு பாவத்திற்காக நம்மை நரகம் தள்ளமாட்டார் என்ற கடவுள் மேல் அதீத நம்பிக்கை கொண்டவர். கடைசி நபர் ஊழிய நேசன். இவரும் கடவுளைக் குறித்து பிறரிடம் ஊழியம் செய்யும் போது, அவர் அற்புதங்களை செய்பவர், வல்லமையானவர், கடன் தீர்ப்பார், நோய்களை சுகமாக்குவார் என்று சொல்லி கடவுளை வல்லமையான மிகவும் அன்பான தெய்வமாகக் காட்டி ஊழியம் செய்யும் இவர், ஒருமுறையேனும் இயேசு நியாயாதிபதியாக மீண்டும் வர இருக்கிறார். அவருடைய இரத்தத்தால் கழுவப்படாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு நித்திய நித்தியமாக அக்கினிக் கடலிலே தள்ளப்படுவார்கள் என்ற செய்தியை ஒருமுறையேனும் சொல்லாதவர் அல்லது சொல்ல பயப்படுகிறவர். இவர்களின் உரையாடல்களை நான்கு வாரங்களும் நாம் கேட்போம்.

**காட்சி - 1 (இரவு 9.00 மணி )**

ஊழிய நேசன்: Praise the Lord! ஆலயப்பிரியன், இந்த நேரத்துல பைபிளை எடுத்துக் கொண்டு எங்க போறீங்க?

ஆலயப்பிரியன்: நம்ம சர்ச்ல நடக்கிற முழு இரவு ஜெபத்துக்குப் போய்க்கிட்டு இருக்கேன்.

ஊழிய நேசன்: எப்ப முடியும்?

ஆலயப்பிரியன்: 11.00 மணிக்கு முடிந்து விடும்.

ஊழிய நேசன்: ஓ! எனக்கும் வர ஆசைதான், ஆனால் நாளைக் காலைல கிராம ஊழியத்திற்குச் செல்ல இருப்பதால் வர இயலாது. அடுத்த முறை பார்ப்போம். சரி, உங்களிடம் ஒன்றைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். எங்க கிராம ஊழியத்திற்காக ஜெபித்துக்கோங்க. நிறைய ஆத்தும ாக்கள் வரணும், ஆலயம் கட்டணும், அதற்கு மூன்று சென்ட் இடம் வேணும், அது தடையில்லாம, எதிர்ப்புகள் இல்லாம வாங்கணும். அதுக்காக ஜெபிச்சிகோங்க.

ஆலயப்பிரியன்: சரி அண்ணன், கண்டிப்பாக ஜெபிக்கி றோம்.

ஊழிய நேசன்: மேலும் முக்கியமான ஒரு ஜெபக்குறிப்பு. அந்த கிராமம் பிசாசின் பிடியில் கட்டப்பட்டுள்ளது. விக்கிர கங்களால் சூழப்பட்டிருக்கிறது. அதற்காக ஜெபிங்க. இவங்க எல்லாரும் பரலோகவாசிகளாக மாற வேண்டும் என்பது தான் எங்கள் ஊழிய நோக்கம்.

ஆலயப்பிரியன்: ஆமாண்ணே! இவங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளா விட்டால் நரகத்திலதான் காலந்தள்ளணும்.

ஊழிய நேசன் : சரியா சொன்னீங்க? ஏன் நம்ம கிறிஸ்தவர் கள் கூட இரட்சிக்கப்படாம இருந்தா அல்லது ஊழியம் செய்யாம இருந்தா, அவர்களும் நரகத்துக்குதான் போக வேண்டும்.

**ஆலயப்பிரியன்:** என்ன அண்ணே இப்படி சொல்லிட்டிங்க! இது உண்மையா? இதைக் குறித்து நம்ம சபைகளில ரொம்ப பேச மாட்டுக்காங்களே ஏன்? நரகம் என்றால் என்ன? என்று சொல்லுங்கள் அண்ணன்.

**ஊழிய நேசன்:** நம்ம சபைகள் நரகத்தைக் குறித்துப் பேசுவது கிடையாது, ஏன் ஒரு சில சபைகள் இந்த நரகத்தை ஏற்றுக்கொள்ளுவதும் கிடையாது. அவர்கள் தேவனின் அன்பையும், கிருபையையும் தவறாகப் புரிந்து கொண்ட வர்கள் என்று சொல்ல வேண்டும். இன்னும் சொல்லப் போனல் ஏழாம் நாள் ஓய்வு சபைக்காரர்களும், யெகோவா வின் சாட்சிக்காரர்களும் அவர்கள் மூல கோட்பாட்டிலிருந்தே இதை எடுத்து விட்டார்கள். மேலும் நரகம், அக்கினிக் கடல் போன்ற வசனங்களை வேதத்திலிருந்து எடுக்கப் பிரயாசப் படுகிறார்கள். சரி, நீ கேட்ட கேள்விக்குப் பதிலை சுருக்க மாகச் சொல்கிறேன். நீயும் முழு இரவு ஜெபத்திற்குப் போகணுமே. நரகம் என்பது கிறிஸ்துவை நிராகரிப்பவர்கள் நித்திய நித்தியமாக கடவுளின் கடுமையான கோபத்திற்கு உள்ளாகும் இடம். 2 தெசலோ 1:8-10 வசனங்களில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் நித்திய மகிமையிலும் அவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையும் அடைவார்கள் என்கிறார் பவுல். சிலுவையில் கூட மனந்திரும்பிய கள்ளனுக்கு அவர் பரதீசின் வாழ்வைக் கொடுக்கிறார். நரகத்தில் இருக்கும் பொழுது நாம் தேவனிடமிருந்து முற்றிலுமாக பிரிக்கப்படுறோம். நம் வாழ்வின் பாவங்கள் அனைத்தையும், குற்ற உணர்வு, அவமானம் இவைகளை நாமே முழுமையாக ஏற்றுக் கொள்ளும் பொழுது, அது அவர்களுக்குப் பாரமாகவும், வேதனையாகவும் இருக்கும்.

**ஆலயப்பிரியன்:** ஆமாம்! அவருடைய பிரசன்னம் இல்லாத இடம் நரகம் தான் அண்ணே!

**ஊழிய நேசன்:** இதைத்தான் நம்ம சபைகள் எப்போதாவது சுருக்கமாகப் போதிக்கிறது. ஆனால் இரண்டு வசனம் சொல்லுகிறேன். எடுத்து வாசிங்க. *(மத் 13:41-42; வெளி 14:9-11)*

**ஆலயப்பிரியன்:** 'மனுகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்' *(மத் 13:41-42)*.

'அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில் லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டி யானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தி னாலும் வாதிக்கப்படுவான். அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது. ' (வெளி 14:9-11).

அண்ணே! வசனம் தெளிவா சொல்லுது நம்மதான் அதை உணரல... இதுல அக்கினியும் கந்தகமும், இரவும் பகலும் இளைப்பாறுதல் இராது, இதெல்லாம் வாசிக்கும் பொழுதே பயமா இருக்கு.

**ஊழியநேசன்:** இப்போது உங்களுக்கு ஜெபத்திற்கு நேரமா யிற்று, வருகிற திங்கட்கிழமை சாயங்காலம் நம்ம இருவரும் இதைக்குறித்து இன்னும் பேசலாம். சாயங்காலம் எங்க வீட்டுக்கு வாங்க. ஆனால் எனக்குத் தெரிந்த ஒரு அண்ணன் இருக்காங்க. அவங்க பெயர் சத்திய வாசகன். அவங்க வீட்டிற்கு அடுத்த வாரம் போய் இன்னும் நிறைய இதைக் குறித்த சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளுவோம். எனக்கும் கூட 'அக்கினிக் கடல்' என்கிற வார்த்தை இன்னும் புரியல.

**ஆலப்பிரியன்:** அப்படியா! அக்கினிக்கடல் என்பது நித்திய நித்தியமா மனுன் வேதனையை அனுபவிக்கிற இடமாம்! அது எப்படி? ஒரு மனுன் தனது வாழ்நாள்ல 70 வருமோ அல்லது 80 வருமோ வாழ்றான், அதிலே அவன் செய்த பாவத்திற்கோ அல்லது கடவுளை ஏற்றுக்கொள்ளாததற்கோ அவ்வளவு பெரிய தண்டனையை, அதுவும் முடிவில்லாத காலமாக அனுபவிக்க கடவுள் அனுமதிப்பாரா?

**ஊழியநேசன்:** இந்த சந்தேகத்தோடதான் நானும் கடவுளின் அன்பை பிறருக்கு சொல்லிக்கிட்டு இருக்கிறேன். அடுத்த வாரம் நம்ம சத்திய வாசகன் அண்ணன் வீட்ல இந்த சந்தேகத்தையெல்லாம் தீர்த்துக் கொள்வோம்.

*(ஆலயப்பிரியன் விரைவாக ஆலயத்திற்கு செல்லுகிறார். ஊழிய நேசன் வீட்டுக்கு விரைகிறார்.)*

**Mr. Issac Kamalash**



# அழைப்பின் குரல் கேட்டேன்

இயேசுவை உணர்ந்து கொண்டேன்:

என்னுடைய பெயர் ஆர்.கணேஷ். நான் புதுக்கோட்டை மாவட்டம் காரைக்குடியில் பிறந்தேன். ஆனால் என்னுடைய அப்பாவின் வேலையின் நிமித்தமாக நாங்கள் எல்லாரும் அந்தமான், நிக்கோபார் தீவுவில் உள்ள போர்ட்பிளேயர் நகருக்குக் குடிபெயர்ந்து போனோம். எனது குடும்பம் ஒரு பாரம்பரியமான இந்து சிலைகளைச் செய்ய கூடிய 'திராவிட பிராமன்' என்று அழைக்கப்படும் 'பூசாரி' குடும்பம். எனவே நானும் பக்தியுள்ள சூழலில் வளர்ந்தவன். தினமும் காய்திரி மந்திரம், கணபதி மூல மந்திரம், பகவத்கீதை மற்றும் ராமாயணத்தை வழிபட்டு வளர்ந்தேன்.

எனது தந்தை ஒரு கட்டிட ஒப்பந்ததாரராக இருந்தார் எவ்வளவு பணம் வந்தாலும், எங்களுக்கு அது போதும னதாக இருக்காது. அதிகமான வறுமையினால் மிகவும் கஷ்டப்பட்டோம். சந்தோஷம் என்பது எங்களிடம் இல் லாமல் போய்விட்டது. ஏன் இப்படி நமக்கு மட்டும் இந்தக் கஷ்டம் என்று என்னுடைய அம்மாவிடம் கேட்ட போது சில நிலப்பிரச்சனை காரணமாக நமது அருகில் இருக்கும் பக்கத்து வீட்டுக்காரர் நமது குடும்பத்திற்கு விரோதமாக மந்திரம் செய்துள்ளார். அதனால் நமக்கு இவ்வளவு கஷ்டம் என்று கூறினார்கள். அதனால் என்னுடைய அப்பாவும், அம்மாவும் ஒரு ஜோதிடரை அணுகினார்கள். ஆனாலும் எந்த பயனும் இல்லை. இந்த நிலையிலும் நம்முடைய தெய்வங்கள் எல்லாம் ஒரு நாள் எல்லாவற்றையும் மாற்றும் என்று என்னுடைய அம்மா கூறினார்கள். இதனால் நான் தினமும் அனைத்து தெய்வங்களையும் மிக அதிகமாக வழிபட ஆரம்பித்தேன். இந்த சமயத்தில் எனது 12ஆம் வகுப்பு கணிதப் பயிற்சிக்காக Tution சென்றேன். அங்கு ஒரு கிறிஸ்தவ நண்பனைச் சந்தித்தேன். அவன் பெயர் சுபாகர் ராவ். அவனுடைய நல்ல பழக்க வாழ்க்கை முறையைப் பார்த்து அவனிடம் பழக ஆரம்பித்தேன். ஒரு நாள் என்னை அவனுடைய ஆலயத்தி ற்குக் கூட்டிச் சென்றான். அங்கு அவனுடைய போதகர் என்னிடம் இயேசுவை பற்றி கூறினார். கடைசியில் ஒரு வார்த்தை சொன்னார் "இயேசு மட்டுமே உண்மையான கடவுள்" என்று அதை கேட்ட நாளிலிருந்து என்னுடைய மனதில் அதிக குழப்பமாயிருந்தது. அப்படியென்றால் இவ்வளவு நாள் நான் வணங்கிற இந்த தெய்வங்கள் எல்லாம் உண்மையான தெய்வம் இல்லையா? என்று கேள்வி எழும்பியது. இதனால் ஒரு நாள் நான் வணங்கும் இந்து தெய்வங்களிடம் போய் தீபங்களை ஏற்றி வைத்து கிறிஸ்தவர்கள் சொல்கிறது போல் இயேசு மட்டுமே உண்மையான கடவுளா? என்று கேட்ட அந்த நொடியில் தீபங்கள் எல்லாம் அணைந்து போய்விட்டது. நான் இயேசு என்ற பெயரைச் சொன்ன உடனே தீபங்கள் எல்லாம் அணைந்து போய்விட்டது என்று குழம்பினேன்.

கிறிஸ்தவர்களின் நடத்தைகள் உண்மையிலேயே ஊக்கமளிக்கும் வகையில் இருந்ததால், நான் திரும்பவும் இந்த இயேசுவிடம் போய் கேள்வி கேட்க முடிவு செய்தேன். நீங்கள் உண்மையிலேயே கடவுளாக இருந்தால் உங்களை எந்த வழியிலாவது எனக்கு வெளிப்படுத்துங்கள் என்று கூறிய உடனே என் மனதில் ஏதோ ஒரு பெரிய பாரம் குறைந்தது பலூன் போல் இலகுவானது. இந்த உணர்வை என் வாழ்நாளில் நான் உணர்ந்திராத நான், எந்த வார்த்தைகளாலும் வெளிப்படுத்த முடியாத மகிழ்ச்சியையும் அமைதியையும் உணர்ந்து அழ ஆரம்பித்தேன். இயேசு மட்டுமே உண்மை யான கடவுள் என்று முடிவு எடுத்து டிசம்பர் 25ஆம் தேதி 2005ஆம் ஆண்டு ஞானஸ்நானம் எடுத்தேன். என் அப்பாவும், அம்மாவும் என்னை எதிர்த்தார்கள். என்னை அடித்து வீட்டிலிருந்து வெளியே போக சொன்னார்கள். அதனால் இரண்டு நாளாக எனது நண்பரான சுபாகர் வீட்டிலிருந்தேன். திரும்பவும் என்னுடைய பெற்றோர்கள் என்னை வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். பல பிரச்சனைகள் ஏற்பட்டது ஆனாலும் நான் வைராக்கியமாக இருந்தேன். பின்பு 4 ஆண்டுகளுக்குப் பிறகு என்னுடைய தம்பி முதலில் ஆண்டவரை ஏற்றுக் கொண்டான். பின்பு என்னுடைய அப்பாவும், அம்மாவும் ஆண்டவரை ஏற்றுக் கொண்டார்கள். இப்பொழுது தேவ சமாதானம் எங்கள் குடும்பத்தில் உள்ளது.

தேவ அழைப்பு:

எனது மேற்படிப்பிற்காகச் சென்னை வந்தேன். அம்பத்தூர் FMPB Office அருகிலுள்ள AG Church-லிருந்து BFA படித்து கொண்டிருந்த போது அறைகூவலை Hindi மொழிபெயர்ப்பைச் சரிபார்க்க எனக்கு FMPB Office-லிருந்து வேலை கொடுத்தனர். அதை படிக்கும் போது எனக்கும் வட மாநிலத்திற்குப் போய் ஊழியம் செய்ய வேண்டும், அறியபடாத மக்களுக்குத் தேவனைப் பற்றி சொல்ல வேண்டும் என்ற ஆர்வம் வந்தது. அதற்கு வாய்ப்புகளும் எனக்கு FMPB மூலமாகவே ஏற்பட்டது அதனால் 2011 ஆம் ஆண்டு FMPB ஊழியத்தில் இணைந்தேன். ஓர் ஆண்டு ஜான்சியில் பயிற்சியை முடித்து விட்டு ஒடிசா மாநிலத்தி லுள்ள ஜஷிப்பூர் பணித்தளத்தில் ஊழியம் செய்தேன். பின்பு 2015 ஆம் ஆண்டு எனக்குத் திருமணமானது. என் மனைவியின் பெயர் ஆர். சுமதி. அதன் பின்பு குடும்ப மாக அரிசந்திரன்பூர் பகுதியில் Ho இன மக்கள் மத்தியில் 6 மாதங்களும், 5 ஆண்டுகள் Pano இன மக்கள் மத்தியில் Dhenkanal பகுதியிலும் 1 ½ வருடமாக ஜெகன்நாதர்பூர் பணித்தளத்திலும் ஊழியம் செய்து வந்தோம். இப்பொழுது Utkal Regional Secretary-யாக ஒடிசா மாநிலத்தில் ஊழியம் செய்து கொண்டிருக்கிறோம். என்னுடைய ம கள் ஜி. ஹர்ஷினி. 3ஆம் வகுப்பு டோனாவூரில் படித்துக் கொண்டிருக்கிறாள்.

என் நண்பன் இயேசுவை எனக்கு காண்பித்ததால் இன்று நான் மிஷனெரியாய் வட இந்தியாவில்(ஒரிசா) ஆண்டவரால் பயன்படுத்தப்படுகிறேன். இதுவரை 1216 பேருக்கு திருமுழுக்குக் கொடுக்கவும், 16 திருச்சபைகளை உருவாக்கவும், 5 ஆலயங்களைக் கட்டுவதற்கும் தேவன் உதவிச் செய்தார். இதைவாசிக்கும் தம்பி தங்கையே நீ எத்தனை பேருக்கு இயேசுவை குறித்து அறிவித்துள்ளாய் திறந்த வாசல் உனக்கு முன் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட வளையத்திற்குள் உன்னை அடைத்துக் கொள்ளாமல், வட தேசம் செல்லும் வீரராய் உன்னை ஒப்புக்கொடுப்பாயா?



Mr. R. Ganesh
Odisha

# மிஷனெரிப் பணியில் சிறு ஜெபக்குழுக்களின் பங்கு



மிஷனெரி இயக்கங்களின் வரலாற்றைக் பார்க்கும் போது, வாலிப ஜெபக்குழுக்களின் பங்கு மிக சிறப்பானதாக மற்றும் இன்றியமையானததாக இருந்துள்ளது. எங்கெல்லாம் வாலிபர்கள் ஒன்றாகக் கூடி ஜெபித்தனரோ அங்கிருந்து மிஷனெரி இயக்கங்கள் உருவானதையும் நாம் பார்க்கிறோம்.

1806-ம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள வில்லியம்ஸ் கல்லூரி வாலிபர்கள் 5 பேர் ஒரு நதியோரத்தில் ஜெபத்திற்காகவும், தேவனுடைய இராஜ்யம் உலகெங்கிலும் குறிப்பாக அறியப்படாத இடங்களில் அறிவிக்கப் பட வேண்டும் என திட்டமிடக் கூடினார்கள். தீடிரென வந்த பெரும்மழையால் அருகேயிருந்து வைக்கல்போர் அருகே மழைக்கு ஒதுங்கி ஜெபிக்க ஆரம்பித்தனர், ஆவியானவரின் வழிநடத்துதலையும், அவருடைய பிரசன்னத்தையும் உணர்ந்தனர். அதன்பின் கிரமமாக கிறிஸ்துவை அறியாதோர் அறிந்திட சகோதரர்கள் ஐக்கியம் என்ற பெயரில் ஜெபித்து வந்தனர். இதன் விளைவே 1812-ம் ஆண்டில் உருவான அமெரிக்க மிஷனெரி சங்கம் (The American Board of Commissioners of Foreign Missions). அயல் நாடுகளுக்கு மிஷனெரிகளை அனுப்ப இது ஆரம்பிக்கப்பட்டது. 1812-ம் ஆண்டு முதல் 5 மிஷனெரிகளை இந்திய தேசத்திற்கு மிஷனெரிகளாக அனுப்பியது. அதைத் தொடர்ந்து ஆயிரமாயிர மிஷனெரிகள் உலகத்தின் தேவைமிக்க நாடுகளுக்கு மிஷனெரிகளாக அனுப்பப்பட்டனர்.

அதற்கு அடிப்படை காரணம் வாலிபர்கள் ஒன்றுகூடி ஜெபத்ததின் விளைவேயாகும். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு வாலிபர்கள் குழுவாக கூடி ஜெபிக்க விரும்பி உற்சாகப்படுத்தி வருகிறது. வாலிபர்களாகிய நீங்கள் கிடைக்கும் நேரங்களில், உங்கள் கல்விக் கூடங்களில், வேலைபார்க்கும் இடத்தில், ஆலயத்தில், வீடுகளில் ஒன்றுகூடி நம் தேசம் கிறிஸ்துவை அறிய ஜெபிக்க உங்களை அழைக்கிறோம். கடந்த நாட்களில் அப்படிக் கூடி ஜெபித்த வாலிப ஜெபக்குழுவில் இருந்து அநேக மிஷனெரிகள் எழும்பியதை நம் இயக்கத்தில் கண்டிருக்கிறோம். அதை விட்டுவிடாமல் தொடருவோம்.

இப்படிக் குழுவாக கூடி ஜெபத்தை நடத்த வாலிப ஆண், பெண் தலைவர்கள் தேவை. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வாலிபர் ஜெபக்குழு ஒன்று தினமும் இரயில் மூலம் நாகர்கோவில் - திருநெல்வேலிக்கு வேலைக்காக வரும் வாலிப சகோதரிகள் பயணத்தின்போது கூடி ஜெபித்து வந்தனர். முதலில் பல போராட்டங்களை சந்தித்த அவர்கள், அவைகளை மேற்கொண்டு ஊக்கமாக ஜெபித்தார்கள். மாபெரும் விளைவுகள் உண்டானது. நாமும் குழுவாக கூடி ஜெபிப்பதினால் உண்டாகும் பயன்களை பார்ப்போம்.

<u>நாம் குழுவாக கூடி ஜெபிப்பதினால் உண்டாகும் பயன்கள்:</u>

1. கூடி ஜெபிப்பது ஆவிக்குரிய வளர்ச்சியைத் தருகிறது.
2. கூடி ஜெபிப்பது ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தி கிறிஸ்துவில் நிலைத்திருக்க உதவுகிறது.
3. ஆவிக்குரிய உக்கிராண வாழ்க்கைக்கு உதவி செய்கிறது.
4. நம்மை நெருங்கி நிற்கும் பாவ வாழ்க்கையை மேற்கொள்ள உதவுகிறது.
5. வேத அறிவிலும், கிறிஸ்துவைப்பற்றி அறிகிற அறிவிலும் வளரச் செய்கிறது.
6. ஜெபத்தினால் மிஷனெரிகள் தேவனுடைய பெலத்தையும், பாதுகாப்பையும் பெற்று சிறப்பாக ஊழியம் செய்ய உதவி செய்கிறது.
7. நம் வருங்கால வாழ்வின் வெற்றிக்கு அஸ்திபாரமாக இருக்கிறது.
8. கிறிஸ்து இயேசுவின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுத் தருகிறது.
9. ஜெபிப்பதால் நம் குடும்பம், திருச்சபை, மிஷனெரி இயக்கங்கள் ஆசீர்வதிக்கப்படுகின்றன.
10. ஜெபிப்பதால் தேவ சித்தத்தை நம் வாழ்வில் அறியவும், அவரால் பயன்படுத்தப்படவும் காரணமாயிருக்கிறது.

ஆண்டவர் உங்களை இவ்விதமாக கூடி ஜெபிக்க அழைத்தால் நீங்கள் முன் வாருங்கள். உங்களுக்கு உதவிட நாங்கள் காத்திருக்கிறோம். ஜெபக்குறிப்புக்கள் மற்றும் இளைஞர் பத்திரிக்கை மாதந்தோறும் அனுப்ப தயாராக இருக்கிறோம். நீங்கள் எங்களுடன் தொடர்பு கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

**Rev. Dr. E. Rajan**

நமது ஜெபத்தின் மூலமாக தான் தேவனால் அதிக அளவில் செயலாற்ற முடியும் என்பது கடந்த கால வரலாறு - A.J. கார்டன்

## இரண்டாம் வாரச் செய்தி




# நரகமா? நித்தியமா?

**காட்சி - 2 (சாயங்காலம் ஆறுமணி ஊழிய நேசன் வீடு)**

ஊழிய நேசன்: Praise the Lord! அண்ணன்! சொன்ன படியே சரியா வந்துட்டீங்களே! ரொம்ப சந்தோமாக இருக்கு. வேதத்தின் மேல இவ்வளவு பிரியம் வைத்திருக்கிறத பார்த்தா, உண்மையிலே பாராட்டனும்.

ஆலயப்பிரியன்: வெள்ளிக்கிழமை அன்னைக்கு முழு இரவு ஜெபத்துக்குப் போற வழியில நம்ம பேசிக்கிட்ட வியம் என் மனதை விட்டு அகலலை. நானும் கூட அது சம்பந்தமா ஒரு சில வேதப்பகுதிகளைக் குறித்து வைத்திருக்கிறேன். நம்ம அதைக் குறித்துப் பேசலாமே.

ஊழிய நேசன்: நானும் அப்படித்தான் சனிக்கிழமை கிராம ஊழியத்திற்குப் போகும் போது நரகத்தைக்குறித்தும், நித்தி ய தண்டனையைக் குறித்ததுமான எண்ணத்தில்தான் இருந்தேன். ஒரு இடத்தில் தெரு பிரசங்கத்தில் கூட பாவிகள் நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்று பிரசங்கித்தேன். அதற்குப் பின்பு அதைக்குறித்து பேசாமல் பழைய செய்தி களையே பிரசங்கித்து விட்டு வந்தேன். இன்னும் அதைக் குறித்த தெளிவு நமக்குத் தேவைதான்.

ஆலயப்பிரியன்: நித்திய வேதனை என்பது உண்மை தானா அண்ணே?

ஊழிய நேசன்: நிச்சயமாக நரகம் நித்திய வேதனையின் இடமே, இதை தான் மத் 18:8-லும், 25:41-லும் வாசிக்கிறோம். '...நீ இரண்டு கையுடையவனாய் அல்லது இரண்டு காலு டையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும்...''...சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டுபிசாசுக் காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்' இதில் 'நித்தி யம்' என்பது காலம் காலமாக அல்லது முடிவில்லா காலமாக அர்த்தம் கொள்ள வேண்டும்.

ஆலயப்பிரியன்: உணர்ந்து வாசித்தால் பயமா இருக்கு அண்ணே! அந்த நரகம் இனி எப்படியெல்லாம் இருக்கும் என்று சொல்லுங்களேன்!

ஊழியநேசன்: சொல்றேன் கேளுங்க,

1. **அவியாத அக்கினி உள்ள இடம்** - மாற்கு 9:45
2. **நியாயத்தீர்ப்புக்கான இடம்** - மத் 23:33
3. **வேதனையுள்ள இடம்** - லூக்கா 16:23
4. **காரிருள் நிறைந்த இடம்** - யூதா 13
5. **அழுகையும் பற்கடிப்பும் உள்ள இடம்** - மத் 8:12

இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

ஆலயப்பிரியன்: இந்த வசனங்களையெல்லாம் படிக்கும் பொழுது பரலோகத்திற்கு ஆட்டுக்குட்டியானவர் போல், நரகத்திற்கு யார் தலைவர் அண்ணே?

ஊழியநேசன்: நாம் இதுவரை வாசித்த ஒரு சில வசனங் களிலிருந்து நாம் புரிந்து கொண்டது நரகத்திற்குத் தலை வன் என்று யாரும் கிடையாது. அதற்காக ஒரு சில வசனத்தை வாசிப்போமே. வெளி 20:10ல் மோசம் போக்கின பிசாசானவனின், ... அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். வெளி 1:18ன் படி நான் மரணத்திற்கும், பாதாளத்திற்கும் உரிய திறவுகோலை உடையவனாயிருக் கிறேன் என்கிறார். நாம் ஏற்கெனவே வாசித்தது போல் மத்தேயு சுவிசேத்தில் அவர் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவர். இந்த வசனங்களை நாம் தி யானிக்கும் பொழுது, ஒரே ஒரு ராஜா அது இயேசு ராஜா. நரகத்திற்கென்று எந்த தலைவனும் கிடையாது. அவனும் அந்த வேதனையை அனுபவிப்பான். சொல்லப்போனால் நரகம் தேவனின் கட்டுப்பாட்டில் உள்ள அவரது கோபத் திற்கு உள்ளான ஓர் இடம்.

ஆலயப்பிரியன்: இந்தநரகத்தைக்குறித்து, அதன்வேதனை யைக் குறித்து இயேசுவானவர் எங்கேயும் பிரசங்கித்தாரா அண்ணே?

ஊழியநேசன்: உங்க கிட்ட தாழ்மையா ஒண்ணு கேட்கணும். வேதத்த ஒருமுறையாவது Full -ஆ வாசிச்சிருக்கீங்களா?

**ஆலயப்பிரியன்:** இப்போ நாலஞ்சு வருமா தான் வாசிக்கி றேன். ஒருமுறை Full-ஆ வாசிச்சி முடிச்சிட்டேன்னு சொல்ல முடியாது. ஆனா தினமும் கொஞ்சநேரம் பைபிள் வாசிப்பேன்.

**ஊழியநேசன்:** தினமும் வேதம் வாசிப்பது சரிதான். ஏதாவது குறிப்பை வைத்து ஒருமுறையேனும் வேதாகமத்தை முழுமையாக வாசித்து முடிக்க வேண்டும். சரி, இப்போது இயேசு நாதர் இதைக் குறித்து என்ன சொன்னார் என்று பார்ப்போம். அவருடைய பிரசங்கங்கள் மிகக் கடுமையாக இருக்கும். எடுத்துக்காட்டாக தன் சகோதரனை முடனே என்று சொல்லுகிறவன் எரி நரகத்திற்கு ஏதுவாயிருப்பான் (மத் 5:22) மேலும் தன் சீர்களிடம் பேசும்பொழுது ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப் படுங்கள் என்கிறார் (மத் 10:28). பேதுருவிடம் சொல்லும் பொழுது, பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளு வதில்லை என்கிறார். மத் 23:15ல் வேதபாரகர், பரிசேயரிடம் சொல்லும் பொழுது அதிக ஆக் கினை அடைவீர்கள், இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள் என் றெல்லாம் எச்சரிக்கிறார். மொத்தத்தில் சொல்லப் போனால் இயேசுவான வர் பரலோகத்தைப் பற்றி பேசுவதை விட, நரகத்தை பற்றி அதிகம் பேசியிருக்கிறார்.



**ஆலயப்பிரியன்:** கரெக்டா சொன்னீங்க அண்ணே! நம்ம தலைகீழா செய்கி றோம், யாராவது இறந் தால் கூட பரலோகத் தைப் பற்றி பேசுவோம். ஆனால் நரகத்தைக் குறித்துப் பேசுவது கிடை யாது. சமீபத்தில் கூட ஓர் ஆறுதல் ஜெபக்கூட்டத்தில் ஐசுவரிய வான், லாசருவைக்குறித்த செய்தியைக் கேட்டேன். அதில் கூட நான் ஆபிரகாமின் மடியில் உட்கார்ந்திருந்த ஒரு எண் ணத்தில்தான் செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் அந்த ஐசுவரியவானின் வேதனையைக் குறித்து நான் அதிகம் யோசிக்கவில்லை. நம்ம கிறிஸ்தவ 16 மூல அடிப்படை கோட்பாடுகளில் கூட அக்கினிக் கடல் உள்ளது. பரலோகம் இல்லை.

**ஊழியநேசன்:** சரியான சந்தேகம் எனக்கு மனதில் தோன்றுகிறது. அக்கினிக் கடல் மூல கோட்பாட்டில் தேவை-யான ஒன்று. இதைக் குறித்த சத்தியங்களை அறிந்து கொள்வது மற்றும் அதை நம்புவதும் தான் அவசியமான ஒன்றும் கூட. ஆனால் பரலோகத்தைக் குறித்த கோட்பாடு களை கொள்கை கோட்பாடாக அறிய வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் அங்கு கிறிஸ்து உண்டு. அது மட்டுமே நமக்குப் போதுமான ஒன்று. நான் கூட இந்த வேத பகுதியில் எனக்குப் பிடித்த பகுதி ஐந்து சகோதரர்கள் அழிகின்றார்களே, யாரையாவது அனுப்பும் என்பது தான். நானும் கூட அந்த ஐசுவரியவானின் வேதனையை அறிய வில்லை. நீங்க கற்றுக்கொண்ட பாடத்தை எனக்கும் சொல் லுங்களேன்.

**ஆலயப்பிரியன்:** அண்ணன் நான் கற்றுக் கொண்டது நரகத்திலிருந்து பரலோகத்தைப் பார்க்க முடியும். மேலும் இந்த சம்பவத்தில் மூன்று பெயர்கள் பதிவு செய்யப்படுகிறது. அதில் ஒன்று தரித்திரன் லாசரு. மற்ற இரண்டும் பழைய ஏற்பாட்டில் மரித்த பரிசுத்தவான்கள் ஆபிரகாம், மோசே. நான் கற்றுக்கொண்டது பணக்காரனாக இருப்பதினால் அவர் நரகம் செல்லவில்லை. லாசருவை ஏறிட்டுப் பார்க் காததினால் அவர் நரகம் சென்றிருக்கலாம்.

**ஊழியநேசன்:** இதுல ஒன்றை சொல்ல விரும்புகிறேன் அண்ணே! ஐசுவரியவான் ஏன் நரகம் சென்றார் என்று நியாயந் தீர்க்க வேண்டிய அவசியம் நமக்கில்லை. அது நியாயம் தீர்க்க வேண்டிய கடவுளின் வேலை. நம்மில் அநேகர் செய்கிற தவறு இது தான். இவன் பரலோகம் செல் லுவான், இவன் நரகம் செல் லுவான் என்று நாமே மனதிற் குள் பட்டியல் போட்டுக் கொண் டிருக்கிறோம். இந்த நேரத்தில் ஐசுவரியவான் ஒரு சொட்டு தண்ணீருக்கு தாகமாயிருந் ததை மறந்துவிடுகிறோம்.

**ஆலயப்பிரியன்:** உண்மை தான் அண்ணே! நான் கூட அதை யோசிக்கல... ஒரு பரி சுத்தவான் சொன்னது எனக்கு ஞாபகம் வருகிறது. அந்த பரிசுத்தவான் பெயர் தெரியல.

**ஊழியநேசன்:** சொல்லுங்க

**ஆலயப்பிரியன்:** பரலோகத்திலே இரண்டு பெரிய ஆச்சரி யங்கள் இருக்குமாம். ஒன்று நாம் நினைப்பவர்கள் அங்கே இருக்கமாட்டார்களாம். இரண்டாவது நாம் நினையாத வர்கள் அங்கே இருப்பார்களாம். *(இருவரும் சிரிப்பு...)*

அண்ணன் நான் டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்கு போயிட்டு வீட்டிற்குப் போக வேண்டும். நீங்கள் முன்பு சொன்னது போல அடுத்த வாரம் ஒருநாள் சத்திய வாசகன் ஐயாவிடம் நேரத்தைக் கேட்டு வாங்கி எனக்குத் தெரியப்படுத்துங்கள். நானும் ஒரு சில கேள்விகளை எழுதிக்கொண்டு வருகிறேன்.

ஊழியநேசன்: எனக்கும் கூட அக்கினிக்கடல் என்பதைக் குறித்து தெளிவு பெற வேண்டும். அடுத்தவாரம் ஐயா வீட்டில் சந்திப்போம்.

**Mr. Issac Kamalash**

*(இருவரும் விடைபெறுதல்)*

# கடந்த மாத ஜெப கரிசனைகள்



**1. ராஜபாளையத்தில் இரவில் நடக்கும் குற்ற செயல்கள் :**

போலீஸ் கண்காணிப்புக்கு மக்கள் வலியுறுத்தல். இரவு நேரங்களில், குறிப்பாக வயதானவர்களை தாக்கி கொள்ளை அடிக்கும் நபர்கள் மனந்திரும்ப, மக்களை ஆயுதங்களை காட்டி மிரட்டுவதும், வீடு, வாகனங்களை சேதப்படுத்துவதும் போன்ற வன்முறைகளில் ஈடுபடும் இளைஞர்கள் கண்டுபிடிக்கப்பட்டு சரியான தண்டனை வழங்கப்பட ஜெபிப்போம்.

**2. தமிழ்நாட்டில் போக்சோ வழக்குகள் அதிகரிப்பு :**

கடுமையான நடவடிக்கை தேவை. தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 2021-ஆம் ஆண்டில், அதற்கு முந்தைய ஆண்டை விட 39.80% அதி கரித்திருப்பதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது. குற்றங்கள் முற்றிலும் தடுக்கப்பட, கடந்த ஓராண்டில் குழந்தைகளுக்கு எதிரான 6,064 குற்றங்கள் பதிவாகியுள்ளன. இவற்றில் 4465 போக்சோ வழக்குகள்.69 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். மூவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் 99.25% பெண் குழந்தைகள் ஆவார்கள். கடுமையான சட்டங்கள் இயற்றப்பட ஜெபிப்போம்.



**3. வெள்ளத்தில் தத்தளிக்கும் பாகிஸ்தான் :**

50 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றுவிட்டோம்! விவசாயிகள் வேதனை!! வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,200-க்கும் மேலாக அதிகரித்துள்ளது. அவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் கிடைக்க, தேவன் மனமிரங்கி இயற்கை அழிவுகள் ஏற்படாமல் பாதுகாக்க ஜெபிப்போம்.





**4. பிராங்க் (Prank) வீடியோ எடுத்தால் ஜெயில் நிச்சயம்.**

பலர் தங்கள் சுயநலத்திற்காக குறும்பு வீடியோக்களை தொழில் ரீதியாக செய்து யூடியூப் சேனலில் வெளியிட்டு, அதன் மூலம் பணமும் சம்பாதிக்கின்றனர். இப்பப்பட்டவர்கள் நல்லமுறையில் தொழில் செய்து சம்பாதிக்கவும், இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு உடல் ரீதியாக அதிர்ச்சியையும், மன ரீதியாக திகைப்பையும் ஏற்படுத்துகிறது. இதில் ஈடுபடும் இளைஞர்கள் இதை கவனத்தில் எடுத்துக்கொண்டு மனம் மாற பாரத்தோடு ஜெபிப்போம்.

**5. ராமநாதபுரம்:**

இராணுவ ஆள் சேர்ப்பு முகாமில் நிராகரிப்பு... விபரீத முடிவெடுத்த கல்லூரி மாணவர். நிராகரிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாமல் மனம் உடைந்து தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் நம் தேசத்தில் இளைஞர்களிடம் இருந்து அகல, இளைஞர்கள் ஒவ்வொருவரும் தேவ அன்பை அறிந்து கொள்ளவும் ஜெபிப்போம்.




**6. அம்மாவின் கழுத்தை அறுத்தேன்;**

முக்தி கிடைக்க புனித நீர் தெளித்தேன்!- மகனின் பகீர் தற்கொலை குறிப்பு. இது போன்ற விபரீதமான செயல்கள் செய்ய நினைக்கும் வாலிபர்கள் மனந்தி ரும்பவும், வேலை தேடும் வாலிபர்களுக்கு நல்ல வேலை கிடைக்கவும் அவர்கள் குடும்பத்தின் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

**7. பட்டப்பகலில் கஞ்சா, மதுபானம் விற்கும் சிறுவர்கள்**

அதிர்ச்சி வீடியோ!!! கஞ்சா விற்பனையில் ஈடுபடும் சிறுவர்களை விரைவில் கண்டறிந்து நல்ல ஆலோசனைகள் வழங்கப்பட, சிறுவர்கள் மனம்தி ரும்ப, சிறுவர்கள், கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள், வேலை தேடுவோரை குறிவைத்து போதைப் பொருளுக்கு அடிமைப்படுத்தப்பட்டு வருமானம் ஈட்ட தந்திரம ாக செயல்படுவோர் கண்டுபிடிக்கப்பட்டு விரைவில் தடுக்கப்பட ஜெபிப்போம்.






**8.கேரளா:**

ஓணம் பண்டிகையில் உச்சம் தொட்ட மது விற்பனை....ஒரே நாளில் ரூ.117 கோடி வசூல். கடந்த ஆண்டை விட ரூ.32 கோடி கூடுதலாக மது விற்பனையாகியுள்ளது.குடி மற்றும் போதைக்கு அடிமைபட்டிருக்கும் நம் தேச மக்கள் மனமாற, குடிப்பழக்கத்தினால் சீரழியும் குடும்பங்கள் பல,அனைத்து மதுபான கடைகளும் மூடப்பட ஜெபிப்போம்.



**9.சாலை விபத்தில் இந்திய அளவில் முதலிடத்தில் தமிழகம்**

ஓட்டுநர் உரிமம் இருந்தால் மட்டுமே வாகனங்களுக்கு காப்பீடு. பொதுவாக சீட் பெல்ட், ஹெல்மெட், ஓட்டுநர் உரிமம் இல்லாமல், காப்பீடு இல்லாமல் வாகனங்களை இயக்குவது, சிக்னல்களை மீறிச் செல்வது, குடிபோதையில் வாகனங்களை இயக்குவது, அதிவேகமாக செல்வது போன்ற விதிமீறல்களால் வரும் ஆபத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து கவனத்துடன் வாகனங்களை இயக்க ஜெபிப்போம்.

**10.தடை செய்யப்பட்ட இயக்கங்களில் இணைந்த 1,500 இளைஞர்கள்:**

அதிர்ச்சி தகவல். பயங்கரவாத இயக்கங்களில் செயல்படும் இளைஞர்கள் மனம் மாறவும், கொடூரமான தாக்குதல்களில் ஈடுபடாமல் இருக்கவும், இவர்கள் படிப்புக்கு ஏற்ற வேலை அவர்களுக்குக் கிடைக்கவும் தேவ அன்பினை அவர்கள் அறிந்து கொள்ளவும் பாரத்தோடு ஜெபிப்போம்.

- Mr. Allan

# இந்திய கிராமங்கள் சுவிசேஷத்தால் ஒளிரட்டும்



நாடெங்கிலும் கிறிஸ்துவின் சுப செய்தியை சொல்லிட காலத்திற்கு ஏற்ற விதத்தில் ஆண்டவர் நமக்கு திட்டங்களை தந்து நடத்துகிறார். நாம் பணி செய்கிற 264 விதமான மக்கள் கூட்டங்களின் மத்தியில் அதிகமாய் வாஞ்சை காட்டும் 50 மக்களினங்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மத்தியில் நம் பணியை தீவிரப்படுத்துகிறோம். அதற்கென வெவ்வேறான அணுகுமுறைகளையும் கையாளுகிறோம். இத்தேவைகளை சந்திப்பதில் நீங்கள் கரம் கரம் கொடுக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஒருமுறை கூட இயேசுவின் நாமம் அறிவிக்கப்படாத கிராமங்களில், கடந்த ஆண்டு 26,500 கிராமங்களை சந்தித்து, தேவனுடைய சுவிசேஷத்தை இரவு முழுவதும் அவர்களுடைய கிராமங்களில் தங்கி (சத்சங்) பாடல்கள், குறு நாடகங்கள் வழியாக நற்செய்தியை அறிவிக்க தேவன் கிருபை செய்தார். இவ்வித ஊழியத்தின் மூலம் மக்கள் எளிதாய் இயேசுவை அறிய முடிகிறது. அவ்விதம் ஒரு கிராமத்திற்குச் சென்று இயேசு கிறிஸ்துவை அறிவிக்க ரூ. 3000/- செலவாகிறது.

அடுத்த ஊர்களிலும் நான் பிரசங்கம் பண்ண வேண்டுமாதலால் அவ்விடங்களுக்கு போவோம் வாருங்கள், இதற்காகவே புறப்பட்டு வந்தேன் என்பதாக மாற்கு 1:32ல் இயேசு கூறுகிறார். கிராமம் கிராமமாக சென்று சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்பதை இந்த வசனத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

மஹாராஷ்டிரா மாநிலம் பால்கா மாவட்டத்தில் முக்காடா என்ற பணித்தளம் உள்ளது. இப்பணித்தளத்தில் உள்ள ஒரு கிராமம் போசேரா இக்கிராமத்தில் கட்காரி என்கிற இன மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் மிகவும் ஏழைகள் கல் உடைப்பு மற்றும் செங்கல்சூளையில் வேலை செய்பவர்கள். குடிப்பழக்கம் திருடுதல், சண்டை போடுதல் போன்ற கெட்ட பழக்கங்கள் கொண்டவர்கள். இதனால் உயர்ஜாதி மக்களால் புறக்கணிக்கப்பட்டனர். இக்கிராமைத்திற்கு நமது மிஷனெரிகள் கடந்து சென்று இரவு கூட்டங்களை நடத்தி சுவிசேஷம் அறிவித்தார்கள். கீதா என்கிற தாயார் முதலில் இயேசுவை ஏற்றுக்கொண்டார். அதன்பிறகு சில குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவே அங்கு ஒரு ஆலயம் கட்டப்பட்டது. இந்த ஆலயம் இன்று தாய் சபையாக மாறியுள்ளது. 2021ல் அந்த ஆலயத்தில் நடைபெற்ற கிறிஸ்மஸ் கூடுகையில், அப்பகுதியின் MLA கலந்து கொண்டார். இந்த ஆலயம் இங்கு வந்த பிறகு இம்மக்கள் சண்டை போடுதல், திருடுதல், குடிப்பழக்கம் இவற்றிலிருந்து விடுதலை பெற்று சந்தோஷமாக வாழ்வதை பார்க்கிறேன் என்று கூறினார். இதுவே நாம் சுவிசேஷத்தை கிராமங்களுக்கு சென்று அறிவிப்பதினால் கிராமங்கள் இயேசுவால் ஒளிர்கின்றன என்பதற்கு சிறந்த எடுத்து காட்டாகும். இந்த ஆண்டு தேவனுடைய ஒத்தாசையால் 35,728 புதிய கிராமங்களில் இரவுக் கூடுகை நடத்தி மக்களை சந்திக்க திட்டமிட்டுள்ளோம். ஆகையால் இந்திய கிராமங்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப்படவும், இத்தேவையில் கரம் கோர்த்திடவும் பாராத்தோடு ஜெபிப்போம்.

<u>துதிக்குறிப்புகள்:</u>

1. நமது இயக்கத்தின் மூலம் ஏப்ரல் 2022 முதல் ஆகஸ்ட் 22 வரைக்கும் 3787 கிராமங்கள் முதல் முறையாக சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டுள்ளதற்காக...
2. இயேசு திரைப்படம் மூலம் 1422 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளதற்காக...
3. ஜீப் குழு மூலம் 2097 கிராமங்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டுள்ளதற்காக...
4. சத்சங் கூடுகைகள் 1,120 இடங்களில் நடத்தப்பட்டதற்காக...
5. இவைகள் மூலம் 5,60,253 பேர் முதல் தடவையாக இயேசுவை அறிந்து கொண்டுள்ளதற்காகவும் 4,977 பேர் இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ளதற்காகவும் தேவனை துதிப்போம்.

<u>ஜெபக்குறிப்புகள்:</u>

1. நமது மிஷனெரிகள் இந்த ஆண்டில் 35,728 கிராமங்களில் இரவு கூடுகைகளை நடத்தி இயேசுவை அறிவிக்க எடுக்கும் முயற்சிகள் நல்ல பயன் தர...
2. கிராமங்களுக்கு செல்லும் போது, கிராமத்தலைவர்கள் அனுமதி மற்றும் உதவிகள் கிடைத்து, எதிர்ப்புகளில்லாமல் சுவிசேஷம் அறிவிக்கப்பட...
3. கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க இயேசு திரைப்படம் காண்பித்தல், சத்சங் கூடுகை ஜீப் குழு ஊழியம், நாடக நிகழ்ச்சிகள் போன்ற ஊழியங்கள் மூலம் திரளானோர் இயேசுவை ஏற்றுக்கொள்ள...
4. Outreach Team-ன் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட, கர்த்தர் நம்முடைய பணித்தளங்களில் அதிகமான Team-ஐ எழுப்பித்தர...
5. சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் தேவனின் அன்பினால் சந்திக்கப்பட, இரட்சிக்கப்பட...
6. மிஷனெரிகளுக்கு எதிராக செயல்படும் அந்தரங்க வல்லமைகள் அழிக்கப்பட, எதிரான திட்டங்கள் செயலற்றுப்போக...
7. மூடப்பழக்கம், போதைப்பழக்கம், விபச்சாரம், குழந்தை திருமணம் போன்ற சமுதாய தீமைகளிலிருந்து விடுதலை பெற்று, வெளிச்சத்தின் பிள்ளைகளாய் வாழ...
8. கிராமங்களில் அறிவிக்கப்படுகின்ற சுவிசேஷ ஊழியங்களின் மூலம் திருச்சபைகள் கட்டப்பட ஜெபிப்போம்.

Mrs. Sheela Daniel



# Gadgets கேஜெட்டுகள்

Gadgets என்பது குறிப்பிட்ட, ஆனாலும் பெரும்பாலும் முக்கியமில்லாத பயன்பாட்டுக்கான சிறுநுட்பக்கருவி அல்லது இயந்திர நுணுக்கப்பகுதி. இது Google dictionary-ன் விளக்கம். ஒருவருக்கு தூக்கத்தை கெடுத்து, உடல் கடிகாரத்தை சீர்குலைப்பதோடு, ஒரு சில மனிதர்களை மிக சோம்பேறிகளாக கேட்ஜெட்கள் மாற்றுகின்றன. இப்படிப்பட்ட ஸ்மார்ட் போன்கள் மற்றும் கேட்ஜெட்களுக்கு மக்கள் அடிமையாகியுள்ளனர். Coolest Back to school Gadgets, Kitchen Gadgets, Smart Beauty Gadgets, Powerful Super hero Gadgets, Cool Gadgets, Smart Home appliances Gadgets, Healthy Gadgets, Summer Gadgets, Kids Gadgets, Amazing Gadgets என்று விளம்பரங்களை காட்டி வாழ்க்கைக்கு முக்கியமில்லாததை முக்கியப்படுத்தி Gadget விற்பனை அதிகரிக்கிறது. தலைமுடியை பின்ன கூட Gadget கண்டுபிடித்துவிட்டனர். Gadgets-ன் அதிகரிப்பால் குடும்பத்தில் நிறைய பிரச்சினைகளும், பிரிவினையும் அதிகரிக்கிறது என்கின்றனர் Gadgets பயன்படுத்துவோர்.

ஸ்டேடிஸ்டாலின் கூற்றுப்படி 2022-ம் ஆண்டில், உலகில் ஸ்மார்ட் போன் பயன்படுத்துவோர்களின் எண்ணிக்கை 6.648 பில்லியனாக உள்ளது. அதாவது உலக மக்கள்தொகையில் 83.40% பேர் ஸ்மார்ட்போன் வைத்திருக்கின்றனர். மொத்தத்தில் ஸ்மார்ட் மற்றும் பீச்சர் போன் வைத்திருக்கும் நபர்களின் எண்ணிக்கை 91.08% ஆகும்.

Google Gadget-ஐப் பயன்படுத்தி 76,502 இணைய தளங்களின் பட்டியலைப் பெறவும், இதில் இருப்பிடத்தகவல், ஹோஸ்டிங் தரவு, தொடர்பு விவரங்கள், தற்போது 8,097 இணையதளங்கள் மற்றும் தளங்களுக்கு திருப்பிவிடப்படும் 5,973 டொமைன்கள் ஆகியவை அடங்கியுள்ளது. இதற்கு முன்பு இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திய 68,405 தளங்களும் தற்போது இந்தியாவில் 126 இணையதளங்களும் கூகுள் கேட்ஜெட்களைப் பயன்படுத்துகின்றன. Gadget-களின் போதையால் சிறுவர் முதல் பெரியவர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர். எல்லா நேரத்தையும் கேட்ஜெட் வீணடிக்கிறது. குடும்பங்களிலிருந்து பிரித்து தவறான சூழ்நிலைகளை கற்றுக்கொடுக்கிறது. தொழில்நுட்ப அடிமைத்தனம் இன்று சமூகத்தில் மிக அதிகமான பிரச்சனையாக உள்ளது.

இன்றைக்கு நாம் சுற்றிப் பார்க்கும் இடங்களெல்லாம் எல்லாருடைய தலையும் எப்படி குனிந்து Gadget-க்கு அடிமையாக்கி உள்ளனர் என்பதை உணர முடிகிறது. முக்கியமாக மாணவர்கள் மத்தியில் இணைய அடிமைத்தனம் இன்று எதிர்கொள்ளும் ஒரு பெரிய பிரச்சனை. மால்கள், வீடுகள் மற்றும் பொது இடங்களில் கூட இலவசமாகக் கிடைக்கும் இணைய வசதிகள் மாணவர்களிடம் தொழில்நுட்ப அடிமைத்தனத்தை அதிகம் தூண்டிவிடுகின்றன.



நேனல் லைப்ரரி ஆஃப் மெடிசன் ஆய்வின் படி 35.9% பேர் இரவு நேர ஸ்மார்ட்போன் பயன்பாட்டின் காரணமாக பகல் நேரத்தில் சோர்வாக உள்ளனர். 38.1%பேர் தூக்கத்தின் தரம் குறைந்துவிட்டதாக ஒப்புக்கொண்டனர். மேலும் 35.8% பேர் Gadget பயன்படுத்துவதால் 4 மணி நேரத்திற்கு குறைவாகவே தூங்கினோம் என்கின்றனர். Gadget பயன்பாட்டால் நன்மைகளும் உண்டு, தீமைகளும் அதிகம் உண்டு. அதிக மன அழுத்தம், மனசோர்வு, தூக்கமின்மை, முதுகுவலி, கழுத்து மற்றும் தோள்பட்டை வலி, கார்பல் டன்னல் சிண்ட்ரோம்(Carpal tunnel syndrome), கண் பாதிப்பு, தலைவலி, உடல்பருமன், நோய் எதிர்ப்பு சக்தி குறைவு என்று அடுக்கி கொண்டே போகலாம். தேவ பிரசன்னத்தில் அமர்ந்து ஜெபித்து Gadget பிரச்சனைகளிலிருந்து ஜெயம் பெறுவோம்.

## ஜெபக்குறிப்புகள்

1. Gadget பயன்பாட்டால் பாதிக்கப்பட்டோர் அடிமைத்தனத்திலிருந்து வெளிவர ஜெபிப்போம்.
2. எலக்ட்ரிக்கல் Gadget-களைப் பயன்படுத்துவதில் மக்கள் எச்சரிக்கையாக இருக்க மற்றும் போதுமான அளவுடன் பயன்படுத்த ஜெபிப்போம்.
3. Gadget பயன்பாட்டால் நிகழும் விபத்துகளிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.
4. Gadget மோகத்தால் திருட்டு, கொலை, வழிப்பறி, மிரட்டல், ஆன்லைன் மோசடியில் ஈடுபடுவோர் மனந்திரும்ப, இந்த தவறான பழக்கத்திலிருந்து வெளிவர ஜெபிப்போம்.
5. செல்போன் கேட்டு பெற்றோர் வாங்கி கொடுக்காததால் சிறுவன் தற்கொலை செய்து கொண்டுள்ளான். படிக்கும் பிள்ளைகள் மத்தியில் செயல்படும் தற்கொலை ஆவிகள் அழிக்கப்படவும், பிள்ளைகளின் பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.
6. Gadget அடிமைத்தனத்திலிருந்து வெளிவர பெற்றோர் பிள்ளைகள் மத்தியில் உறவுகள் மேம்பட, பிள்ளைகளுடன் நேரங்களை செலவிட, கவனத்துடன் கண்காணித்து ஆலோசனை வழங்க ஜெபிப்போம்.
7. Gadget-லிருந்து பிள்ளைகளை பாதுகாக்க பெற்றோருக்கு தேவன் விசேஷித்த ஞானத்தை கட்டளையிட ஜெபிப்போம்.
8. உடல் உபாதைகளை கருத்தில் கொண்டு Gadget செயல்பாட்டை வாலிபர்கள் குறைத்து எச்சரிப்புடன் பாதுகாப்பான பரிசுத்த வாழ்க்கை வாழ ஜெபிப்போம்.
9. மோசம் போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும் (1 கொரி 15:33) என்ற வசனத்தின்படி ஆகாத சம்பாஷணைகளிலிருந்து விடுதலைப்பெற ஜெபிப்போம்.
10. இளம் வாலிபர்கள் மற்றும் வாலிபர்கள் சமூக ஊடகங்களில் அதிக நேரத்தை வீணடிப்பதற்கு பதிலாக தங்கள் நேரத்தை புத்திசாலித்தனமாக பயன்படுத்த ஜெபிப்போம்.

Mrs. Hepsi Sheela

# வெட்கமில்லா மக்கள்

இந்த மாதம் அனலாய் வல்லமையாய் கருத்தாய் ஜெபிக்க ரெடியா? இம் மாதம் நாம் "வெட்கமில்லா" மக்களுக்காக ஜெபிக்கவிருக்கிறோம். நம் எண்ணத்தில் இந்த தலைப்பைக் குறித்து எண்ணினால் என்னென்ன குறிப்புகள் ஞாபகம் வருகிறது... சரி அதை எல்லாம்தான் நான் இங்கு உங்கள் சார்பில் தொகுத்து எழுதியுள்ளேன். ஜெபத்துடன் படித்து இயேசுவின் பாரத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். வேதத்தின் அடிப்படையில் முதலில் நாம் இந்த "வெட்கமில்லா" மக்களைக் குறித்துப் பார்ப்போம். தாவீதின் மகனான அம்னோன் தன் சொந்த சகோதரியாகிய தாமாரை பலவந்தப்படுத்தி அவளது கன்னித் தன்மையை அலங்கோலமாக்கினான். என்ன ஒரு வெட்கம். இப்படிப்பட்ட காரியங்களை இக்காலங்களிலும் நாம் கேள்விப்படுகிறோம் அல்லவா? அடுத்ததாக கேயாசி தன் தலைமை போதகரே காணிக்கை வேண்டாமென்று கூற, அவன் பின்சென்று அப்பொருட்களை கொண்டு வந்தவர்களிடம் பொய் கூறிப் பெற்றுக் கொண்டான். இப்படி சிற்றின்ப ஆசையால் தன் சந்ததிக்கே சாபத்தை பெற்றுக் கொடுத்துவிட்டான்.

இக்காலங்களில் இளம் சமுதாயத்தினர் தங்கள் அரைகுறை உடையில் எடுக்கும் படங்களை தைரியமாக Social Media-க்களில் பகிர்கின்றனர். இதனால் பலர் தீய கயவர்களின் வலைகளில் எளிதாக சிக்கி தங்கள் வாழ்க்கையை தொலைத்து விடுகின்றனர். இவ்வாறு நம் தேசத்தில் தொடர்ந்து நடைபெறாமலிருக்க நம் முழங்கால்களை முடக்குவோம்.

நம் தேசத்தில் வெட்கமில்லாமல் ஒரு கட்சியை விட்டு, மறுகட்சிக்கு பண ஆசையால் தாவும் அரசியல் தலைவர்களுக்காய், மந்திரிகளுக்காய் நாம் மன்றாடுவது நம் கடமையாகும். ஏனெனில் சமீப காலங்களில் இதனால் நம் தேசத்தில் பல மாநிலங்களில் ஆட்சி கவிழ்ந்து புதிய ஆட்சி தொடங்குகிறது. கடைசியில் இதனால் பாதிப்படைவோர் நம் தேச மக்கள் தான். சமாதானமாய் நாம் தாபரிக்க நம்மை ஆளும் தலைவர்களுக்காய் ஜெபிக்க வேண்டும் என்று நம் வேதமும் நமக்கு வழிகாட்டுகிறது.

நி வெட்கக்கேடான காரியங்களை செய்து தக்க தண்டனை பெறாமல் சுற்றிக் கொண்டிருக்கும் அரசியல் வாதிகள், மக்கள் உரிய தண்டனை பெற சட்ட திட்டங்கள் சீரமைக்கப்பட ஜெபிப்போம். பெரிய நிறுவனங்கள் தங்கள் தொழிலாளர்களை இழிவாக நடத்துவது, கொத்தடிமைகளாக வைத்திருப்பது, அதிகாரத்தை பயன்படுத்தி தொழிலாளர்களிடம் எல்லை மீறுவது போன்ற காரியங்கள் பரவலாக பல இடங்களில் தற்போது நடைபெறுகின்றது. இது போன்ற காரியங்கள் நம் தேசத்திலிருந்து முற்றிலும் ஒழிய பாரத்தோடு நாம் ஜெபிப்போம்.

## ஜெபக்குறிப்புகள்:

1. நம் தேசத்தில் திருமணத்தில் கள்ள உறவுகள் பெருகிக் கொண்டு வருகின்றன. அதனை சிலர் பெருமையாக வெளிப்படையாகவே சொல்லி மற்றவர்களையும் தவறாக வழிநடத்துகின்றனர். இவ்வாறு உள்ள யேசபேலின் ஆவிகளை தேவன் முறியடிக்க ஜெபிப்போம்.
2. சில அரசு ஊழியர்கள், அதிகாரிகள் வெட்கமில்லாமல் சிறு சிறு வேலைகளுக்குக் கூட லஞ்சம் வாங்குகின்றனர். ஏழை மக்களை இவர்கள் விட்டுவைப்பதில்லை. இவ்வாறு பண மோகம் கொண்டிருக்கும் மக்களுக்காக ஜெபிப்போம்.
3. வியாபாரிகள் வாய்கூசாமல் பொய்யை மிகைப்படுத்தி, தரமற்ற விலை குறைவானவற்றை விற்கும் அவலம் நம் தேசத்தை விட்ட அகல ஜெபிப்போம்.
4. பள்ளி தலைமை ஆசிரியரை, கள்ளத் தொடர்புக்கு இடையூறாக இருந்ததால் கொலை செய்த நாத்தனார். என்ன ஒரு அவலம். இப்படிப்பட்ட அநியாய கொலைகள் நம் தேசத்தில் இனி காணப்படாமல் இருக்க பாரத்தோடு ஜெபிப்போம்.
5. வெட்கக்கேடான காரியங்களை சமூக வலைத்தளங்களில் (Social Media) தைரியமாக பகிரும் தலைமுறை நம்மிடையே உள்ளது. இப்படிப்பட்ட அருவருப்புகள் நம் தேசத்தில் ஒழிய ஜெபிப்போம்.
6. அன்புடனும், தியாகத்துடனும் குழந்தைகளை வளர்க்கும் பெற்றோர்களை வெட்கமில்லாமல் பொய் கூறி தவறான தொடர்புகளில் ஏமாற்றி வாழ்ந்துக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்காக ஜெபிப்போம்.
7. அதிகாரிகள் கண்முன் ஒரு வேம், அவர்கள் சென்ற பின் ஒரு வேத்தோடு பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் தொழிலாளிகளுக்காய், அரசு பணியாளர்களுக்காய் ஜெபிப்போம்.
8. அரசின் இலவச பொருட்களை தங்கள் வீடுகளில் பதுக்குதல், வேலைக்கு தகுந்த நேரத்திற்கு வராமல் இருப்பது, கலப்பட பொருட்களை தைரியமாய் விற்பது, பணி நேரங்களில் தங்கள் கடமையை நிறைவேற்றாமல் இருப்பவர்களுக்காய் ஜெபிப்போம்.
9. அன்பாக உதவி செய்வது போல் குழந்தைகளை, பெண்களை கடத்தும் மாஃபியா கும்பல்களுக்காய் ஜெபிப்போம்.
10. ஊழியம் என்ற பெயரில் பணம் வாங்கி அதை தகுதியாய் பயன்படுத்தாமல் இருக்கும் ஊழியர்களுக்காய், அவர்கள் அதிக பயத்தோடு தங்கள் ஆத்தும ஆதாயப் பணியை நிறைவேற்ற மன்றாடுவோம்.

-Mrs. Jeba Tyson









## மாதம் ஒரு மக்கள் கூட்டம்

# பகத் இன மக்கள்

இனம் : பகத்(மெக்)

வாழும் இடம் : ஜம்மு காஷ்மீர்

மக்கள் தொகை : 20,00,000

மெக் இன மக்கள் ஜம்மு காஷ்மீரில் வாழ்பவர்கள். இவர்களைப் பகத் மக்கள் எனவும் அழைக்கலாம். இந்த இனம் ரிஷி மெக் என்ற ஒரு துறவி மூலமாய் உருவாக்கப்பட்டது. இவர்கள் அனைவரும் விவசாய தொழில் செய்பவர்கள். ராம் தேவ்ஜி மற்றும் பங்கா மாதாஜி போன்றவைகள், அவர்கள் சமுதாயத்தின் குல தெய்வங்கள். ஜெபத்தினால் மழை பெய்யும் ஆற்றல் படைத்த ரிஷி மேக் என்ற ஒரு பரிசுத்தவானின் சந்ததியில் தோன்றியவர்கள் என நினைக்கின்றனர். மத்திய பிரதேசம் மஹாராஷ்ரா, ராஜஸ்தான் பகுதிகளில் பரவியிருக்கும் இவர்கள் ஹிமாச்சலப் பிரதேசத்திலிருந்து ஜம்மு காஷ்மீரிலிருந்து இடம்பெயர்ந்து வந்த இவர்கள் மேஷ்க், ஆர்ய மேஷ்க் பகத் என்று அழைக்கப்படுகின்றனர். மஹாஸா மக்கள் இனமும் இவர்களைச் சார்ந்தவர்களே. இந்தியா 1947 இல் பிரிந்த பிறகு இவர்களை இந்து மதத்தைத் தழுவி, இந்திய எல்லைக்குள் அடைக்கலம் புகுந்தனர். 20,00,000 மக்கள் தொகை கொண்ட இவர்கள், ஜம்மு காஷ்மீரில் ஒரு பகுதியில் வசிக்கின்றனர்.

<u>தடைகள்:</u>

முன்னோர் வணக்கம், குரு வணக்கத்தில் இருப்பவர்களின் தலைவர்கள் பலர் கிறிஸ்துவை வெறுப்பவர்கள். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் சமூகத்தை விட்டு துரத்தப்படுகின்றனர். அதனால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டுகின்றனர். மது குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்ட இவர்கள் மத்தியில் விபச்சாரம் மற்றும் திருமணத்திற்கு பின்னர் மற்றவர்களுடன் உறவு கொள்ளுதல் போன்ற தீய பழக்கங்களில் சிக்கி தவிக்கின்றனர்.

படித்த இளைஞர்களுக்கு வேலைக்கிடைக்க, விசுவாச வாலிபர்களுக்குத் தகுதியான விசுவாச துணைகள் அமைய வேண்டும். வேலை வாய்ப்பு குறைவாக இருப்பதினால் போதை பொருட்கள் கடத்தல் மற்றும் வன்முறையில் ஈடுபட்டு அதிக பணம் சம்பாதிக்கின்றனர்.

<u>ஜெபக்குறிப்புகள்:</u>

1. பகத் மக்கள் கூட்டம் தங்கள் சமுதாயக் கட்டுப்பாட்டின் நிமித்தமாக இயேசு கிறிஸ்துவின் அடியவராக மாற தயங்குகின்றனர். அவர்கள் அதை விலைக்கிரயம் கொடுத்து கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள...
2. குரு வணக்கங்களிலிருந்து விடுபட்டு உண்மை தெய்வத்தை அறிந்து கொள்ள...
3. இந்த மக்களை குறித்த பாரத்தினால் நிரப்பப்பட்டு இவர்கள் மத்தியில் பணிபுரியும் ஊழியர்களைக் தேவன் அனுப்ப...
4. திருமணத்திற்கு பிறகு பிற தவறான உறவுகளை களைந்து திருமண ஒப்பந்தத்தில் உண்மையாக இருக்க...
5. இவர்கள் மொழியைக் கற்று, அவர்கள் மொழியில் வேதாகமம் மொழிபெயர்க்கப்பட...
6. அவர்களின் முன்னோர்களில் ஒருவராகிய ரிமேஷ்க் சக்தி வாய்ந்தவர் என்ற நம்பிக்கையிலிருந்து விடுபட...
7. இவர்களின் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு சத்தியத்தை அறிந்து கொள்ள...
8. பல வருடங்களாக அறியாமையிலிருக்கும் இவர்கள் இப்பிரபஞ்சத்தின் ஆளுகையிலிருந்து விடுபட...
9. தீய பழக்கங்களில் சிக்கி தவிக்கும் மக்களின் கட்டுகள் அறுக்கப்பட...
10. பகத் இனத்தவர்கள் மத்தியில் ஊழியம் பெருக
11. இனி வரும் புதிய தலைமுறைக்கு நல்ல கல்வி, ஞானம் கிடைக்க, வாலிப விழிப்புணர்வு, இலவசக் கல்வி, போதை மறுவாழ்வு ஆரம்பிக்க...
12. இம்மக்கள் கூட்டத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் சாட்சியுள்ள வாழ்க்கை வாழ ஜெபிப்போம்.

- Mr. David




வார்த்தைகள் தடுமாறலாம். ஆனால் வாழ்க்கை தடுமாறாமல் இருக்க வழிகாட்ட வல்லவர்கள் இந்த முதியவர்கள், அனுபவங்களின் அமுதசுரபியாக திகழ்பவர்கள், வாழ்க்கையில் பல அனுபவங்களைப் பெற்றவர்கள், வாழ்வின் எதார்த்தத்தை அறிந்தவர்கள், கடந்த தலைமுறையினருக்கும் இந்த தலைமுறையினருக்கும் இணைப்புப் பாலமாக நின்று பல்வேறு அனுபவங்களை அறிவுரையாக வழங்குபவர்கள்.

பொதுவாக 60 வயதை கடந்த ஆண், பெண் அனைவரும் மூத்த குடிமக்கள் அல்லது முதியோர் எனக் கருதப்படுகின்றனர். ஐநாவின் கணிப்பின்படி தற்போது உலகில் ஒவ்வொரு பத்துப்பேருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் 60 அதற்கு மேற்பட்ட வயதை உடையவர்கள் காணப்படுகின்றனர். தற்போது உலகளவில் 60 கோடி முதியவர்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உலகளவில் பிறப்பு இறப்பு விகிதம் குறைந்து வருவதால் 2050-க்குள் 200 கோடியாக இந்த தொகை அதிகரிக்கலாம் என நம்பப்படுகிறது. முதுமையடையும் போது மூளையின் நரம்பு மண்டல அணுக்களின் எண்ணிக்கையானது குறைவடையத் தொடங்குவதால் தோல் சுருக்கம், தசை எடை குறைவு, உடல் அசைவுத் தன்மைக் குறைவு, இனப்பெருக்கத்தடை, உளவியல் பாதிப்புகள் என பல்வேறு மாற்றங்கள் உடலில் ஏற்படுவதால் வயதானவர்களின் நடவடிக்கைகளின் வேகம் குறைந்து காணப்படும்.

அன்றாடம் உழைத்து குழந்தைகளின் நலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டுள்ள பெற்றோர்களுக்கு வயதான பின்னர் கிடைக்கும் பரிசு, தனிமை பிறரை சார்ந்திருக்கும் நிலை, சமூக வாழ்க்கையில் இருந்து விலகல், குடும்ப உறுப்பினர்களால் புறக்கணிக்கப்படுதல் ஆகியவை மேலும் இவர்களது நிலையை மோசமாக்குகிறது.

உலகம் முழுவதிலும் உள்ள மூத்த குடிமக்களை மதிக்கவும், மரியாதை செலுத்தவும், குடும்பம், சமூகம் மற்றும் நாட்டுக்கு அவர்கள் ஆற்றிய சேவைகளை நினைவுகூறும் வகையிலும், அவர்களின் அறிவு, ஆற்றல் மற்றும் சாதனைகளைப் பார்த்துக் கற்றுக்கொள்ளவும் மக்களுக்கு எடுத்துரைக்க சர்வதேச முதியோர் தினம் அக்டோபர் 1 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

## ஜெபக்குறிப்புகள்:

1. அனைத்து முதியவர்களுக்கும் உணவு, உடை, இருப்பிடம் மற்றும் சுகாதார வசதிகள் போன்றவை கிடைக்கப் பெற, வாழ்வதற்கான நல்ல சூழலை உருவாக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட ஜெபிப்போம்.
2. முதியோர்களை அங்கீகரிக்கவும், அவர்களின் உணர்வுகளை, கவலைகளைப் புரிந்து கொண்டு அவர்களை கண்ணியமாக நடத்த ஜெபிப்போம்.
3. நவீன யுகத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் நாம் பொருளாதாரத்தை அதிகரிக்கும் எண்ணத்திலேயே இருப்பதால் முதிய பெற்றோர்களை சரியாக பராமரிக்க ஜெபிப்போம்.
4. இயந்திரமான வாழ்க்கை, மேலை நாடுகளின் கலாச்சார தாக்கம் ஆகியவை காரணமாக பெற்றோர் தங்கள் குழந்தைகளுடன் நேரம் செலவிடாததால் இந்த குழந்தைகள் பெற்றோரை முதியோர் இல்லங்களில் சேர்ப்பது அதிகரித்து விட்டது. இந்த நிலை மாற ஜெபிப்போம்.
5. இளைஞர்கள் தாமும் ஒரு காலத்தில் முதியவர்களாவோம் என்ற எண்ணத்தை மனதிற் கொள்ளவும், அதன் மூலம் முதியோர் இல்லங்கள் என்ற அமைப்பு முறையை அடுத்த தலைமுறைக்கு காட்ட முடியாத காலம் வர ஜெபிப்போம்.
6. 21 ஆம் நூற்றாண்டில் வயதானோர் எதிர் கொள்ளக்கூடிய சவால் மற்றும் வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு, மத்திய, மாநில அரசுகள் இவர்களை முன்னிலைப்படுத்தும் விதத்தில் திட்டங்கள் கொண்டு வர ஜெபிப்போம்.
7. சமூக பொருளாதார மற்றும் அரசியல் வாழ்க்கையில் முதியோர்களின் பங்களிப்பை வலுப்படுத்த ஜெபிப்போம்.
8. வயதானவர்களிடம் உள்ள தனிமை, வெறுமை, பாதுகாப்பின்மை, உணர்வுகளை புரிந்து கொள்ளாமை போன்றவற்றினால் வரும் மன அழுத்தம், விரக்தி மாறவும், அவர்களுக்கான சுதந்திரம் மற்றும் மதிப்பை அளிக்கவும் ஜெபிப்போம்.
9. வயதான காலங்களில் வரும் எலும்புத் தேய்மானம், நீரிழிவு, இதய நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த பராமரிப்பு கிடைக்கவும், மறதி நோய் உள்ளவர்கள் சிறப்பாக கையாளப்படவும் ஜெபிப்போம்.
10. பெற்றோர் மற்றும் மூத்த குடி மக்கள் நலன் மற்றும் பராமரிப்பு சட்டம் 2007- இவர்களுக்கு தேவையான பராமரிப்பை உறுதி செய்யவும், இந்த சட்டத்தின் விதிகளை முறைப்படுத்தவும், நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.
11. முதிர் வயதிலும் உங்களை நான் ஏந்துவேன், சுமப்பேன், தப்புவிப்பேன் என்று வாக்கு பண்ணியிருக்கும் தேவன் தாமே எல்லா முதியவர்களையும் பாதுகாக்கவும், பெலப்படுத்தவும் ஜெபிப்போம்.

-Mrs. Steffi



# தரிசனமா? வேத அறிவா?

**காட்சி - 3 - (ஒருவாரம் கழித்து ஊழிய நேசன் வீட்டிற்கு ஆலயப்பிரியன்: வருதல் - புதன் கிழமை மாலை 6.00மணி)**

ஊழிய நேசன்: Praise the Lord! அண்ணன்! சத்திய வாசகன் ஐயா அனுமதி கொடுத்திருக்கிறார். அங்க போயிட்டு சீக்கிரம் வந்திரலாம். நான் புதன்கிழமை என்கிறதையே மறந்து விட்டேன். அவர் சரி என்று ஒப்புக்கொண்டதால் நாம் போய் ஐயாவிடம் பேசிவிட்டு வந்திடலாம். இன்னைக்கு 7.30 மணிக்கு எங்க வீட்டில ஊழிய ஜெபக்கூட்டம் உண்டு. அதற்குள்ளாக திரும்பி விடலாம்.

ஆலயப் பிரியன்: சரி அண்ணன், அதற்குள்ளாக நாம் திரும்பிவிடலாம்.

*(இருவரும் நடந்து சத்திய வாசகன் ஐயா வீட்டிற்குப் போகுதல்... போகும் வழியில் உரையாடல்)*

ஊழிய நேசன்: நான் இவ்வளவு ஊழியம் செய்தாலும், தேசத்திற்காக மினெரி ஜெபக்கூட்டம் நடத்தினாலும், நிச்சயமா, அறிய வேண்டியதை இன்னும் அறியலையே என்கிற எண்ணம் எனக்குள்ளே இருக்கு.

ஆலயப்பிரியன்: உங்களுக்காவது இந்த எண்ணம் வந்திருக்கு, ஆலய பொறுப்புகளில நான் இருந்தா கூட, கடுகளவு இதைக்குறித்து தெரியாம இருந்துட்டேனே என்ற குற்றஉணர்வு எனக்குள்ள இருக்கு.

ஊழியநேசன்: நான் சின்னப்பிள்ளையா இருக்கும் போது அப்பாக்கூட பெந்தேகோஸ்தே சபைகளில் நடைபெறும் கன்வென்ன் கூட்டங்களில இதைப்பத்தி பேசறத நான் கேட்டிருக்கிருக்கேன். அப்ப எனக்கு பயமா இருக்கும். ஆனா எனக்கு புரியல.

ஆலயப்பிரியன்: நான் இந்த ஆலயத்துக்குத் தீவிரமா வர ஆரம்பிச்சதே என் பிள்ளைகள் வேலைக்குப் போன பிறகு அதுங்களுக்கு வாழ்க்கை அமைக்கணுமே என்ற கவலையில தான். அப்படி போக ஆரம்பிச்ச நான், தொடர்ந்து முழு ஆலய காரியங்களிலே ஈடுபட ஆரம்பித்தேன். இந்த ஐந்தாறு வருத்துல ஒரு முறை கூட நரகத்தின் செய்தியைப்பற்றி ஆலயத்தல கேட்கல,

*(பேசிக்கொண்டே இருவரும் சத்திய வாசகன் ஐயா வீட்டிற்கு வந்தடைதல். ஊழிய நேசன் கதவைத் தட்டுதல், சத்திய வாசகன் ஐயா கதவைத் திறத்தல். சத்திய வாசகன்: ஸ்தோத்திரம் தம்பி! இரண்டு பேரும் உள்ள வாங்க. (இருவரும் உள்ளே சென்று அமருதல்)*

ஊழிய நேசன்: ஐயா! நீங்க எங்களுக்குக் கொடுத்த நேரத்திற்கு ரொம்ப நன்றி! ஒரு சில காரியங்களை உங்களோடு பகிர்ந்து சந்தேகம் தீர்த்துக் கொள்ளலாமுனு வந்திருக்கிறோம்.

ஆலயப்பிரியன்: ஐயா சமீபத்துல ஒரு சிறு புத்தகம் ஒன்று வாசித்தேன். அதுல ஒரு சகோதரி தான் நகரத்துக்குப் போய்ட்டு வந்ததாக ஒரு அனுபவமுள்ள சாட்சியை, மன்னிக்கனும் தரிசனத்தை வாசித்தேன். அதுல யூதாஸ்காரியோத்து 'நான் காட்டிக்கொடுத்துட்டேன், காட்டிக் கொடுத்துட்டேன்' என்று கதறிக் கொண்டிருப்பதாகவும்...

சத்தியவாசகன்: *(சிரித்துக் கொண்டே குறுக்கிட்டு)* எந்த மொழியில கத்திக்கொண்டிருந்தாராம்!!! *(மூவரும் சிரித்தல்)*

ஆலயப்பிரியன்: (தொடருதல்) மேலும் அநேக மரித்துப் போன ஊழியக்காரர்களையெல்லாம் அங்கு பார்த்ததாகவும் தொடருகிறது.

சத்தியவாசகன்: இது ஒன்றும் புதிதில்ல தம்பி, அநேகர் தங்கள் தரிசனமாக இப்படி எழுதுவது உண்டு. அதை விட்டு விடுவோம். நான் மாணவப் பருவத்தில் இருக்கும் பொழுது எங்களுக்கு பி. சாம் ஐயா நரகத்தைக் குறித்து அநேக சத்தியங்களை வேதத்தின் மூலம் கற்றுக்கொடுத்து இறுதியில்

பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்தி மேலும் தேசத்தில் இப்படி மடிந்து போகும் ஜனங்களை மீட்டெடுக்கவும் எங்களை வழி நடத்துனாங்க.

ஊழிய நேசன்: அப்படிப்பட்ட போதனைகள் இப்ப குறைஞ் சிட்டு ஐயா. நரகம், பாதாளம், அக்கினிக்கடல் இப்படிப்பட்ட வார்த்தைகளுக்கான அர்த்தங்கள் பழைய ஏற்பாட்டிலோ அல்லது இயேசுவின் போதனையிலோ இருக்குதா ஐயா.

சத்தியவாசகன்: சரியா கேட்டிங்க தம்பி, நீங்க கேட்டத மட்டும் வசனத்தின் மூலம் பார்ப்போம். முதல் வார்த்தையாக Gehenna (கெஹன்னா) or Ben-hinnom (பென்ஹின்னோம்). இது எருசலேமுக்குத் தெற்கே உள்ள ஒரு பள்ளத்தாக்கு. அங்கே யூதர்கள் தங்கள் குழந்தைகளை 'மோளேகீக்கு' நெருப்பில் பலியிட்டனர். இதை எரேமியா தனது புத்தகத் திலே பதிவு செய்கிறார். 'குமாரரையும், தங்கள் குமாரத்தி களையும் அக்கினியிலே தகனிக்கிறதற்காக அவர்கள் இன் னோம் குமாரனின் பள்ளத்தாக்கிலுள்ள தோப்பேத்தின் மேடு களைக் கட்டினார்கள்(எரே 7:31)'. 'கிழக்கு வாசலுக்கு எதிரான இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கிலே புறப்பட்டுப் போய், நான் உன்னுடனே சொல்லும் வார்த்தைகளை அங்கே பிரசித்தப்படுத்து... தங்கள் பிள்ளைகளைப் பாகா லுக்குத் தகனபலிகளாகத் தகனிக்கும்படி, பாகாலின் மேடைகளைக் கட்டினபடியினாலும் இப்படி வரப்பண்ணு வேன் என்று பதிவு செய்கிறார் (எரே 19:2-5)'. பின்பு நீதியுள்ள ராஜா யோசியா அந்தப்பள்ளத்தாக்கைத் தீட்டுப்படுத்து கிறான். இதை 2 இராஜா 23:10ல் பார்க்கலாம். இது பின் நாட்களில் ஒரு வகையான குப்பைக் கிடங்காக மாறியது. இங்கு தொடர்ந்து நெருப்பு எரிந்துக்கொண்டு புகை மண்டல மாகக் காணப்பட்டது. இங்கு இறந்து போன விலங்குளை எறிவதும், குற்றவாளிகளை உயிரோடு தூக்கி எரியும் இட மாகவும் காணப்பட்டது. அங்கு அழுகையும், பற்கடிப்பும் ஏற்படுவது இயல்பு. இதை ஏசாயா உருவகமாகக் கடவுளின் தீர்ப்புக்கு ஒப்பிடுகிறார் (ஏசாயா 30:33; 66:24). புதிய ஏற்பாட்டுக் காலங்களில் கெஹென்னா என்பது நகரத்திற்கு ஒத்ததாக இருந்தது. கெஹென்னாவைப் பற்றி இயேசு பேசும் பொழுது, தண்டனையின் இடமாகக் குறிப்பிடுகிறார். (மத் 5:20-22; 10:28).

ஆலயப்பிரியன்: அப்படினா பாதாளம்னா என்ன?

சத்திய வாசகன்: சரியா கேட்டிங்க தம்பி! இதைக்குறித்தும் சில வசனங்களை தொடர்ச்சியாகப் பார்க்கலாம். இதற் கான வார்த்தை 'ஹேடீஸ்' (Hades) பேதுரு தனது முதல் பிரசங்கத்தில் குறிப்பிடும் பொழுது (அப்2:29-31) இயேசு வின் ஆன்மா தாவீதின் தீர்க்கதரிசனத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறார் (சங் 16:10). இதில் வரும் பாதாளம் என்ற வார்த் தைக்கு இணையான வார்த்தை 'ஷியோல்' என்ற எபிரேய வார்த்தை. இந்த ஷியோல் என்ற வார்த்தைக்கு இணை யான கிரேக்க வார்த்தைதான் 'ஹேடீஸ்'. இயேசுவானவர் ஐசுவரியாவான் லாசருவின் சரித்திரத்தில் சொல்லும் பொழுது, (லூக்கா 16:19-31) இந்த ஹேடீஸ் என்ற வார்த் தையைத்தான் பயன்படுத்துகிறார். இது வேதனை நிறைந்த, பற்கடிப்பு நிறைந்த ஒரு தற்காலிக தண்டனையின் இடமாகும்.

இப்போது நாம் மூவரும் சேர்ந்து ஒரு வசனத்தை வாசிப் போம். ( மூவரும் வசனம் வாசித்தல், சத்திய நேசன் ஐயா இருப்பிடம் சொல்லுதல்) வெளி 20:13-14 சமுத்திரம் தன்னி லுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் 'அக்கினிக்கடலிலே' தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்.

ஊழிய நேசன்: ஓ!!!.. அப்படின்னா அக்கினிக்கடல்னா என்ன ஐயா?

> சிலர் தேவாலயம் அல்லது தேவாலய மணியின்
> ஓசைக்குள் வாழ விரும்புகிறார்கள்;
> நான் நரகத்தின் ஒரு புறத்தில் ஒரு மீட்புக்
> கடையை நடத்த விரும்புகிறேன்.
>
> – சி.டி. ஸ்டட்

சத்திய வாசகன்: ஒன்னு தெரியுமா உங்களுக்கு, நம்ம ஆலயப் பிரியன் இருக்கிறதனால இதை சொல்றேன். நமது கிறிஸ்தவ 16 அடிப்படை மூலக் கோட்பாட்டில் இந்த 'அக்கினிக்கடலும்' ஒன்று. ஒவ்வொரு கிறிஸ்தவனும் இதை நம்ப வேண்டும். இன்னும் சொல்லப்போனால் மூலக் கோட்பாடுகள் தெளிவு பெறாமல், நம்பாமல் திருவிருந்தில் பங்கு கொள்ளக்கூடாது. ஆதி நாட்களில் நமது திருச்சபை களில் இந்தக் கோட்பாடுகள் அனைத்தையும் திடப்படுத்தல் வகுப்பில் கற்றுக்கொடுத்தார்கள். (ஆலயப்பிரியனைப் பார்த்து) இப்பொழுது திடப்படுத்தல் வகுப்பில் என்ன சொல் லிக்கொடுக்கிறார்கள் தெரியுமா?

ஆலயப்பிரியன்: உண்மையிலேயே எனக்கு தெரியாது ஐயா! நாலு வருத்துக்கு முன்னாடி என் மகள் இந்த வகுப்பில் ஒழுங்காகப் பங்கு பெறுவாள். நானோ திடப்படுத்தல் அன்று சொந்தங்களைக் கூப்பிட்டு மண்டபத்தில விருந்து நடத்தினேனே ஒழிய ஒருநாள் கூட நீ என்ன படிச்சன்னு கேட்கலயே ஐயா. (மூவரும் புன்னகைக்க...)

சத்தியவாசகன்: சரி இப்ப நம்ம அக்கினிக்கடல பார்ப்போம்.

ஊழியநேசன் : அர்த்தமுள்ள நேரங்களாக இருக்கிறதனால நம்ம இதைக்குறித்தே இன்னைக்கு முழுமையா கற்றுக் கொண்டுவீட்டிற்குப்போகலாம். ஜெபத்திற்கு வருகிற இரண்டு பேரையும் அடுத்த வாரம் வரச்சொல்லி போன் பண்ணிடு றேன். (ஊழிய நேசன் போன் செய்தல்)

*(மூவருக்கும் பிஸ்கட் காபி கொடுக்கப்படுகிறது. சாப்பிட்டுக் கொண்டே சம்பாணை தொடருகிறது)*

குறிப்பு:- இந்த சம்பாணையை நான்காம் வாரச் செய்தியில் பார்ப்போம்.

**Mr. Issac Kamalash**

# நிதி மேலாண்மை கொள்கைகள்



<u>கடன்பட அனுமதிக்கப்படும் 3 சூழ்நிலைகள்:</u>

– நாம் வாங்கிய பொருளின் அல்லது சொத்தின் மதிப்பு நாளுக்கு நாள் உயரும் போது,

– நாம் வாங்கிய பொருளின் மதிப்பு நாம் வாங்கிய கடனுக்கு சமமாகவோ அல்லது கூடுதலாகவோ இருக்கும் போது,

– நாம் வாங்கிய பொருளால் நம்முடைய மாத செலவில் எவ்வித சுமையோ, தடையோ இல்லாது இருக்கும் பொழுது,

<u>கடன்படுவது ஒரு பாவமா?</u>

வேதாகமம் கடனை ஒரு சாபமாகவும், அடிமைத்தனமாகவும் கூறினாலும், அதனை ஒரு பாவமாக வகைப்படுத்துவதில்லை. எப்பொழுதும் கடன் பட்டிராமல் ஆசீர்வாதமாக இருப்பதே நம் வாழ்க்கைக்கு தேவனின் சித்தம். கடன்படுவது என்றும் விதி விலக்கு.

## <u>கடனிலிருந்து வெளிவருவது எப்படி?</u>

<u>1.ஜெபம்:</u> கடன் கட்டிலிருந்து விடுபட முதல்படி, ஜெபிப்பதுதான். சுயமாக செயல்பட்டு தேவசித்தத்திற்கு புறம்பாக கடன் சுமையை ஏற்றுக்கொண்டதற்கு தேவனிடத்தில் மன்னிப்பு பெற்று நம் நிதியையும் வாழ்க்கையையும் முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும்.

<u>2. புதிய கடன்களை ஏற்காமலிருப்பது:</u> பல மக்கள் பழைய கடன்களை அடைக்க புதிய கடனை ஏற்கின்றனர். ஜெபத்துடன் கடன் பாரத்திலிருந்து வெளிவர முடிவெடுத்தப்பின் புதிய கடன்களை ஏற்காமல் இருப்பது அவசியம்.

<u>3. மொத்த கடன்களையும், சொத்துக்களின் மதிப்பை பட்டியலிட வேண்டும்:</u> நம்முடைய கடன்நிலையை முழுவதுமாக உணர வேண்டும். அதற்காக மொத்தக் கடன்களையும் பட்டியலிடும் போது அதற்கேற்றவாறு திட்டமிட்டு வெளியேற ஏதுவாயிருக்கும். அதே போல் நம் சொத்துக்களையும் பட்டியலிடும் போது, சிலவற்றை விற்று கடன்களை அடைக்க முடியுமா என்று முடிவெடுக்க முடியும்.

<u>4. எழுதப்பட்ட வரவு செலவு திட்டம் கொண்டு செயல்படுவது:</u> பல நேரங்களில் நம்முடைய கணக்கு வழக்குகளை மனதிலேயே செய்கிறோம். ஆனால் இந்த சூழ்நிலையில் நாம் நிச்சயமாக அவ்வாறு செய்யாமல் எழுத்தின் மூலம் குடும்பமாக இணைந்து வரவு செலவு திட்டத்தை தயாரித்து செயல்படுத்த வேண்டும்.

<u>5. ஒவ்வொரு கடனுக்கும் ஒவ்வொரு திரும்பி செலுத்தும் திட்டம் கொள்வது:</u> நிதி சூழ்நிலையில் நாம் எங்கிருக்கிறோம் என்று தெளிவாய் உணர்ந்திருப்பின் ஒவ்வொரு கடனையும் திரும்பச் செலுத்தும் கால அட்டவணையை தேவனோடு இணைந்து ஜெபத்தோடு தயார் செய்ய வேண்டும்.

<u>6. கடன் கொடுத்தவர்களுக்கு தெளிவாய் தகவலளிப்பது:</u> நமக்கு கடன் கொடுத்தவர்களிடம் நம் சூழ்நிலையையும் திட்டத்தையும் தெளிவாய் எடுத்து சொல்வது மிகவும் அவசியமாகும். பல நேரங்கள் கடன் எப்பொழுது பிரச்சனையாக மாறும் என்றால் கடன் கொடுத்தவர்களுக்கு சரியான தகவல் போய் சேராமல் இருக்கும் போது தான்.

<u>7. கூடுதல் சம்பாதிக்கும் வாய்ப்புகளை பயன்படுத்துவது:</u> வேறு வாய்ப்புகள் மூலம் நம் சம்பாத்தியத்தை உயர்த்த முடியுமென்றால் நாம் கட்டாயம் செய்ய வேண்டும். அதே நேரத்தில் அதிகமாக உழைப்பதினால் நம் உடல்நிலையையும் நாம் கவனித்து கொள்ள வேண்டும்.

<u>8. தேவ மனிதர்களிடமிருந்து அறிவுரைப் பெற்றுக் கொள்வது:</u> நமக்கு என்றுமே சிறப்பாக தேவ அறிவுரை சொல்லக் கூடிய மக்கள் அவசியம் தேவை. இத்தகைய அறிவுரை நம்மை உற்சாகப்படுத்தி விசுவாசத்தினுள் காத்துக்கொள்ள உதவும்.

<u>நிதி மேலாண்மைக்கு உதவும் சில கருவிகள்:</u>

<u>தனிப்பட்ட நிதி அறிக்கை:</u>(Personal Financial Statement) எல்லா நிறுவனங்களிலும் கணக்கு அறிக்கைகள் உண்டு(Accounts Statement). அதேபோல் நம்முடைய வாழ்க்கையிலும் தனிப்பட்ட நிதி அறிக்கை இருப்பது அவசியம். நம்முடைய வரவை முதலில் பட்டியலிட வேண்டும். சம்பளம் மற்றும் வாடகைகள் அல்லது லாபப்பங்குகள் அனைத்தையும் நம் வரவில் சேர்க்க வேண்டும். அதேபோல் நம்முடைய செலவுகளையும் கடன்களையும் பட்டியலிட வேண்டும். இவ்வாறு செய்யும் போது, நம்முடைய உக்கிராணத்துவத்தின் நிலையை அறிந்து சீர் செய்ய முடியும்.

<u>வரவு செலவு திட்டம்:</u> சிறிய தொழில் நிறுவனங்கள் முதல் பெரிய அரசாங்கங்கள் வரை வரவு செலவு திட்டமிடல் ஒரு முக்கியமானப் பணியாகும். அதே போல் நாம் வரும் வருடத்திற்கான வரவு/செலவுகளை கணித்து திட்டமிட்டு எழுத்து வடிவம் கொடுக்க வேண்டும். இவ்வாறு குடும்பத்தோடு சேர்ந்து இதனை செய்யும் போது, சிறுவயதிலேயே குழந்தைகள் சிறந்த உக்கிராணக்காரராய் மாறுவார்கள்.

<u>அடிக்கடி நிகழும் சிறிய செலவுகளை குறைப்பது/தவிர்ப்பது:</u> சிறிய நரிகள் திராட்சை தோட்டத்தைக் கெடுக்கிறது. நாம் நம்முடைய நிலைமை தேவைக்கு அதிகமான விலையுயர்ந்த எதனையும் வாங்காமல் இருக்கலாம். ஆனால் தினம், தினம் சாக்லேட் வாங்கும் பழக்கம் இருக்கலாம் அல்லது அடிக்கடி நவீன அலங்காரப்பொருட்கள் வாங்கலாம். இத்தகைய செலவுகளை முழுவருடத்திற்கு கணக்கு செய்து பார்த்தால் அது மிகவும் அதிகமாக முடியும். இத்தகையச் செலவுகளைக் குறைக்க/தவிர்க்க வேண்டும்.

<u>பொறுப்புடன் சேமிப்பது/முதலீடு செய்வது:</u>

பல நேரங்களில் நாம் சேமித்து நல்ல திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டும் என்று எண்ணுவது உண்டு. ஆனால் மாதக்கடைசியிலே எதுவும் மிஞ்சுவது கிடையாது. ஆகையால் சேமிப்பையும் முதலீடுகளையும் மாதத் துவக்கத்திலேயே திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும். தானாகவே நம் வங்கிக் கணக்கிலிருந்து அத்தகைய பணம் எடுத்துக்கொள்ளப்படும் வகையில் நாம் ஆயத்தங்களை செய்யலாம்.

<u>வாயின் வார்த்தைகளை கவனிப்பது:</u> மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்(நீதி 18:21) என்று நாம் அறிவோம். ஆகவே தேவையற்ற அல்லது தவறான வார்த்தைகளை நாம் பேசுவதை தவிர்க்க வேண்டும். என்னிடம் எப்பொழுதும் பணம் கிடையாது. என்னால் நினைத்தாலும் வீடு வாங்க முடியாது போன்ற பேச்சுகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. நம்முடைய ஏழ்மை சார்ந்த மனப்பாங்கை அகற்றி சர்வத்தையும் ஆட்சி செய்யும் ஏக தேவனின் பிள்ளைகள் என்று உணர்ந்து செயல்பட வேண்டும்.

- Mr. Vinoth Solomon

இந்த உலகத்தில் ஒரு முறைதான் நீ வாழப்போகிறாய் அதற்கு மாறாக பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து பரிணாம மாற்றத்தை நீ அடையப்போவதில்லை பிறவிச் சக்கரத்தில் சிக்கி ஓராயிரம் ஜென்மங்கள் நீ எடுக்கப் போவதும் இல்லை. ஒரே ஒரு முறைதான் வாழப் போகிறாய் இந்த வாழ்க்கையை இயேசுவோடு வாழ, இயேசுவைப் போல் மாற இயேசுவை வெளிப்படுத்த அழைக்கப்பட்டவன் நீ. ஒன்றையே வாஞ்சித்து ஒரே சிந்தையோடு முழு மூச்சாய் வாழ வேண்டியவன் நீ. நினைவெல்லாம் இயேசு என்று அவரோடு நீக்கமறக் கலந்து அவரது நினைவாகவே வாழ்ந்துவிட வேண்டியவன் நீ.

ஒரு வாஞ்சை

வெந்ததைத்தின்று வெறுமனே வாழ்ந்து விதி வந்தால் சாவு என்று இந்த வாழ்க்கையை நீ அலட்சியப்படுத்தக்கூடாது. அதற்கான உரிமையும் உனக்கு இல்லை. வாழ்க்கை எனும் பந்தயசாலையில் தேவன் உனக்கென்றே நியமித்த இலட்சிய ஓட்டம் ஒன்று உண்டு. தேவனே அதை எனக்கு வெளிப்படுத்தும் என்று தேவனிடம் கேட்டு அறிந்துகொள். ஆவியானவர் துணைக்கொண்டு அதை நிச்சயப்படுத்திக்கொள். அதையே வாழ்வின் இலக்காகக் கொண்டு உன் இலட்சியப் பயணத்தை வீரமுடனும் விவேகமுடனும் தொடர்ந்திடு. இதற்கு மத்தியில் மயக்கம் மாயவலைகள் மலிவான சுகங்கள் அடிமைப்படுத்தும் சித்தாந்தங்கள் திசை திரும்பும் மாயாபுரிகள் சின்னக் கனவுகள் எனப் பல வந்து உன் ஓட்டத்துக்குத் தடைவிதிக்கும் என்றாலும் நீ திசைமாறாமல் வேகம் குன்றாமல் வைத்தகால் பின்வாங்காமல் பொறுப்பு எனும் சிலுவையைப் பிடித்துக்கொண்டு ஓட வேண்டும். ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாய் இருக்கிறீர் என்று பவுல் முறையிட்டபோது, அவனை ஆட்கொண்ட தேவன் அவனுக்கு அதைத் திருவாய் மலர்ந்ததை அப் 9:15ல் வாசிக்கிறோம்.

யூதருக்கு...புற ஜாதியாருக்கு...ராஜாக்களுக்கு...

என்னைப்பற்றி அறிவிக்க நான் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரம் நீ என்பதே அந்தத் திருவுளம் பற்றுதல் அப் 9:15ல் நல் விருப்பத்தையும் விருப்பத்தைச் செயலாக்கும் திறனையும் தேவனே தருகிறார். இதுவும் பவுலின் அனுபவ வாக்குமூலம் (பிலிப்பியர் 2:13).

நான் இந்த உலக வாழ்க்கையை வீணாக்கவில்லை என்ற மகிழ்ச்சி தேவ வருகையின் போது உனக்குத் தேவை (பிலி 2:14) எனவே எனது இலட்சியப் பயணம் இனிதே தொடரட்டும்.

ஒரு ஆசை

இந்த ஒப்பற்ற வாஞ்சை நிலைவரம்கொள்ள சுயத்துக்கு மரிக்கும் இந்தத் தினச்சாவு ஒரு தொடர் நிகழ்வாக வேண்டும். தினச்சாவு என்பது உன்னை, உன் கனவுகளை, உன் விருப்பங்களை, உன் திட்டங்களை, தீர்மானங்களை, எனது உறவுகளை, உனது முக்கியத்துவங்களை, உனக்குண்டான யாவையும் தேவனுக்குக் கீழ்ப்படுத்துவதாகும். அதாவது தேவனை முக்கியப்படுத்துவதாகும். வாழ்வில் கிறிஸ்து உன்னில் வாழாவிட்டால் கிறிஸ்துவே உன் ஆசை பசி தாகமாகாவிட்டால் மேற்சொன்னவற்றிலிருந்து விடுதலை பெறுவது மாபெரும் இழப்பாகவே தெரியும்.

இயேசுவை ஆதாயப்படுத்திக் கொள்வதென்பது உன் இதயத்தால், எண்ணத்தால், உடலால், உள்ளத்தால், திறமைகளால், பண்பால், அவரை நேசிப்பதும், கனப்படுத்துவதும், சக மனிதர்களை உனக்குச் சமமாக வைத்துப் பாவிப்பதாகும். சுயத்துக்கு மறுப்புச் சொல்லும்வரை இவை ஒன்றும் உன் வாழ்வில் நடக்கப்போவதில்லை. இவை உனது இதயத்தில் பிறக்கும் நித்தியகால ஏக்கமாகவே இருக்கட்டும். மொத்தத்தில் உன் ஆசை பசி தாகம் எல்லாம் இயேசுவாக இருக்கட்டும்.

ஒரு தாகம்

அதற்கு இயேசுவை இன்னும் நான் தீர்க்கமாக அறியட்டும். அவரோடு நான் மனம்விட்டு பேசட்டும். அவர் என்னோடு வேதப்பூர்வமாகப் பேசட்டும் என்று அவரோடுள்ள ஐக்கியத்தை வளர்ப்பதில் வெளிப்படும்.

- ☞ நான் இயேசுவை அறிய வேண்டும்
- ☞ அவரது உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிய வேண்டும்.
- ☞ அவரது பாடுகளின் ஐக்கியத்தை அனுபவிக்க வேண்டும்.
- ☞ அவரை அறியும் அறிவின் மேன்மைக்காக பிற அனைத்துக் காரியங்களையும் நஷ்டமென்றும் குப்பையென்றும் கருத வேண்டும்.
- ☞ தேவன் அழைத்த பரம அழைப்பில் இலக்கை நோக்கி தொடர வேண்டும்.




- ☞ அவரைத் தரிசிக்கும் அந்த நன்னாளில் அவருக்கு ஒப்பாக மாற்றப்பட்ட வேண்டும்.
- ☞ இதுவும் பவுல் அப்போஸ்தலனின் ஏக்கமாக இருந்தது.

இதுவே உனது ஏக்கமும் தாகமுமாக மாற வேண்டும். வேதம் மனமகிழ்ச்சியாகிட வேதத்தின்படி நடக்கும் உத்தமனாக்குமட்டும் நீ வேதத்துக்கு முன் நடுங்கும் மனிதனாக வேண்டும். அந்த நடுக்கமே உன்னை, உலகத்தை, மாமிசத்தை, சாபத்தை, பிசாசை எதிர்க்கும் மாவீரனாக மாற்ற முடியும். வேத வசனத்திற்குக் கீழ்ப்படிவோரை ஆட்கொள்ளும் ஆவியானவர் உனக்குள் தமது உயிர்தெழுதலின் வல்லமையைக் கட்டளையிட்டு முற்றிலும் ஜெயங்கொண்ட வாழ்க்கை நடத்தி தேவனுக்காக அவரது பாடுகளில் குறைவானதை நிறைவேற்ற உன்னைத் துணிவுடன் ஈடுபடச் செய்யட்டும். இயேசுவை அறிந்து இயேசுவோடு ஐக்கியம் கொண்டு, இயேசுவை ஆராதித்து அறிவித்து அனுபவிக்கும் மகனாக, மகளாக வாழ வேண்டியவன் நீ. இந்த உன் இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்திடு. தேவன் உன்னில் மகிமைப்படட்டும்.

# இயேசுவுக்காய் வாழ்வோம்

- Araikooval

## நான்காம் வாரச் செய்தி




# கிருபையா? நியாயத்தீர்ப்பா?

**காட்சி - 3 (தொடருதல்)**

சத்திய வாசகன் : அக்கினிக் கடல் என்பது நித்தியமான தண்டனையைக் குறிக்கிறது. இது முடிவில்லாதது.

ஆலயப்பிரியன்: கடவுள் ஏன் இதைப் படைத்தார் ஐயா! அன்புள்ள தெய்வம், நித்திய, நித்தியமாக அவர் மனிதனைத் தண்டிப்பாரா ஐயா! புரிந்து கொள்ள முடியலையே.

ஊழியநேசன்: கடவுள் அன்புள்ளவர்தான். இந்தக் கிருபையின் காலத்தில் இன்று அவர் உனக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவர். ஆனால் அவர் வருகையின் அன்று, அவர் கிருபையுள்ள கர்த்தராக வராமல் நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாக வருகிறார். இதை எபிரேயர் ஆக்கியோன் ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே என்று எழுதுகிறார் (எபி 10:31). மேலும் அவர் பட்சிக்கிற அக்கினி என்றும் குறிப்பிடுகிறார் (எபி 12:29).

சத்தியவாசகன்: சரியா சொன்னீங்க தம்பி! இயேசுவானவர் சொல்லும் பொழுது நித்தியம் என்கிற வார்த்தையைத் தெளிவாகக் குறிப்பிடுவதைப் பார்க்க முடிகிறது (மத் 25:41). பேதுரு அதைக் குறிப்பிடும் பொழுது, தேவன் அவர்களைத் தப்பவிடாமல் கட்டி நரகத்திலே தள்ளினதாகக் குறிப்பிடுகிறார் (2 பேதுரு 2:4). இப்போது ஆலயப்பிரியன் தம்பி கேட்ட முதல் கேள்விக்கு அதாவது ஏன் நரகத்தைப் படைத்தார் என்ற கேள்விக்குப் பழைய ஏற்பாட்டிலிருந்து ஒரு பகுதியைச் சொல்லுகிறேன் வாசிப்போம். வேதபகுதி: எசே 28:12-19. *(மௌனமாக இருவரும் வேதத்தை வாசிக்கிறார்கள்)*

*(சத்திய வாசகன் ஐயா தொடருதல்)*

இதில் தீருவின் ராஜாவை நோக்கி எழுதப்பட்டது. ஆனால் உருவகமாகச் சாத்தானைப் பற்றி பேசுகிறது. தீருவின் ராஜா ஏதேனில் இல்லை. ஆனால் சாத்தான் இருந்தான். தீருவின் ராஜா ஒரு அபிஷேகம் செய்யப்பட்ட கேருப் அல்ல. ஆனால் சாத்தான் ஒரு தேவதூதன். மேலும் ஏற்கெனவே நாம் பார்த்தபடி, மத் 25:41ல் சொல்லப்பட்டபடி நரகம் சாத்தானுக்காகவும், அவனுடைய தூதர்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்டது.

ஆலயப் பிரியன்: முதல நீங்க சொல்லும் போது, அக்கினிக் கடல் இன்னும் திறப்பட வில்லை என்று சொன்னீர்களே,

சத்திய வாசகன்: உண்மைதான். அதை இரண்டாம் வருகையில் நித்திய தண்டனைக்குரிய ஓர் இடமாக சொல்லப்படுகிறது.

ஆலயப் பிரியன்: ஐசுவரியவான் லாசரு கதையில் ஐசுவரியவான் இருந்த இடம் அக்கினிக்கடல் இல்லையா,

சத்திய வாசகன்: இல்லை. இதைக்குறித்து ஒரு சிறு வரைபடத்தை உங்க whatsapp-க்கு அனுப்புகிறேன் பாருங்கள்.

*(செய்தியின் பகுதியில் அந்தப் படத்தை நீங்களும் பார்க்கலாம் பாருங்கள்)*

ஊழியநேசன்: ஐயா! மாற்கு 9:44,46,48ன்படி 'அங்கே அவர்கள் புழு சாகாமலும், நெருப்பு அணையாமலும் இருக்கும் என்று சொல்லப்படுகிறது' அவர்கள் புழு என்பது என்னையா,

சத்திய வாசகன்: *(புன்முறுவல்)* எனக்கு பிடித்த பிரசங்கிமார்களில் ஒருவரான டேவிட் வில்கர்சன் (David Wilkerson) அவர் மாறுபட்ட கோணத்தில் வர்ணிப்பதை நாமும் ஏற்றுக்

கொள்ளலாம். அவர்கள் புழு என்பது அவர்கள் செயல்களே என்கிறார். ஒரு இளைஞன் கதறுவதாக நினைத்துக் கொள் வோம். 'ஐயோ, வேதம் வாசிக்காமல் இருந்து விட்டேனே, நான் உணர்த்தப்பட்டும் இந்த அசிங்கமான விபச்சாரப்படத்தைப் பார்த்தேனே. இது ஒரு புழு' இப்படியாக இவர்கள் செய்த தப்பி தங்கள், செய்த பாவங்கள், மீறுதல்கள் (*உணர்த்தப்பட்டபிறகு செய்யும் பாவம்*) ஒவ்வொன்றாக அவர்கள் சிந்தனைக்குள் வந்து, நான் தவறிவிட்டேனே என்று கதறுவது அவர்கள் புழு சாகாமலிருக்கும் என்பதைக் குறிக்கிறது. இதைத்தான் நான் முதல சொன்ன பி. சாம் ஐயா புழு கண்ணுக்குள்ள வந்து வாய்வழியே வெளியே வரும்னு சொல்லுவாங்க. புழு காதுக்குள்ள போகும்னு சொல்லுவாங்க. அது உண்மைதான். கேட்க மறந்தது, பேச மறுத்தது, தேவையற்றதைப் பார்த்தது, இவையெல்லாம்தான் புழுக்கள்.

ஊழிய நேசன்: ஐயா இதே போல அங்கே தூக்கம் கிடைய-ாதா? அங்கு அழுகையும் பற்கடிப்பும் இருக்குமாமே.

சத்திய வாசகன்: அது முடிவில்லாத தண்டனையாயிற்றே! இரவும் பகலும் இதில் உள்ளடங்கும் என்றால் தூக்கம் எங்கே? அதே போல் அழுகை என்பது நாம் இதுவரை பார்த்திராத அழு கையாயிருக்கும். அதாவது அவர்களை அழாமல் இருங்கள் என்று சொல்லுவதற்கே யாருமே இருக்க மாட்டார்கள்.

ஆலயப் பிரியன்: அப்படியென்றால் பற்கடிப்பு என்பது எதைக் குறிக்கிறது?

சத்தியவாசகன்: பற்கடிப்பு எதனால் வரும். நீங்களே யோசியுங்களேன்.

ஊழிய நேசன்: கோபமாக இருக்கலாம் அல்லது கிடைத்த வாய்ப்பை விட்டு விட்டேனே என்ற ஏக்கமாக இருக்கலாம் அல்லது அலட்சியமாக இருந்துவிட்டோமே அல்லது முதல கீழ்ப்படிஞ்சி பிறகு தவறி விழுந்துவிட்டோமே என்ற காரணங் கள் இருக்கலாம்.

சத்திய வாசகன்: சபாஷ் தம்பி! நிறைய யோசித்திருக்கீங்க, இதுல பற்களைக் கடிப்பது என்பது அநேகமாக ராஜ்ஜியத்தின் புத்திரர்களாகத்தான் இருக்கவேண்டும். ஏனென்றால் கேள்விப் பட்டு இழந்துபோனார்கள். அதுமட்டுமல்லாமல் அது அடக்க முடியாத உளவியல் வலியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

ஆலயப்பிரியன்: ஐயா இதுல ராஜ்ஜியத்தின் புத்திரர் என்ற வார்த்தை எனக்கே கேட்க கஷ்டமா இருக்கே.

சத்திய வாசகன்: சரிதான் தம்பி! மூன்று வேதபகுதிகளை நான் சொல்லுகிறேன் (மத் 8:12; 13:41-42). மேலும் அக்கிரமக் காரர்களின் கதியைப் பற்றி இயேசு சொல்லும் பொழுது, 'நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்திலிருக்கிறவர்க ளாகவும் உங்களையோ, புறம்பே தள்ளப்பட்டவர்களாகவும் காணும்போது உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக்கும்'.

ஆலயப்பிரியன்: இப்படி வசனம் எங்கயிருக்கு ஐயா?

சத்தியவாசகன்: சொல்றேன் தம்பி, ராஜ்ஜியத்தின் புத்திரர்கள் சொன்னவுடனேயே நீங்க திகைத்த மாதிரி இருந்துச்சி. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு இவங்களப்பத்தி யாருக்குத் தெரியும்? யார் இவங்கள பத்தி பிரசங்கம் கேட்டிருப்பாக?... நம்மதானே. நீங்க பிறகு வாசியுங்கள் (லூக்கா 13:28). அவங்கள பார்த்ததும் அவர்களோடே இருக்கும் வாய்ப்பை இழந்துட்டோமே என்று நினைக்கும் பொழுதுதான் பற்கடிப்பு உண்டாகும்.

ஆலயப்பிரியன்: பற்கடிப்பு என்ற தண்டனை நமக்கு மட்டும் தான் சிமுமிஷுழி இருக்கும் போல, (மூவரும் சிரித்தல்)

ஊழிய நேசன்: ஐயா, தெருப்பிரசங்கத்திலேயோ, கிராம ஊழியங்களிலேயோ இதை ஜனங்களுக்கு எப்படி பிரசங்கிப்பது?

சத்திய வாசகன்: சரியா கேட்டீங்க தம்பி, கிறிஸ்தவம் என்பது மதம் அல்ல மார்க்கம். இந்த மார்க்கம் என்பது குறுகலான வழியைக் கொண்டது. இதைத்தான் முதலில் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இது இரத்தத்தினாலும், தண்ணீரினாலும் குறுகிய பாதை வழியாக குழந்தை பிறப்பைப் போன்றது. இஸ்ரவேல் ஜனங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம், செங்கடலைக் கடந்து வந்தது, இந்தக் குறுகிய பாதை என்ற அர்த்தத்தைக் குறிக்கிறது. இதற்கான எபிரேய வார்த்தை **"Mizrayim"**, ஆங்கில வார்த்தை **"Birth canal"** மேலும் அப் 10:43ன் படி, இயேசுவை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பாவ மன்னிப்பைப் பெறுவான். சுருக்கமாகச் சொல்லப் போனால் அற்புதங்களிலெல்லாம் பெரிய அற்புதம் ஒருவன் பாவ மன்னிப்பைப் பெற்று கிறிஸ்துவின் பிள்ளையாய் மாறுவது தான்.

ஊழிய நேசன்: நம்ம உபதேசங்கள் எப்படி இருக்கணும் ஐயா?

சத்தியவாசகன்: பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்துதல், பாவ மன்னிப்பு, சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல், இரட்சிப்பின் புதுவாழ்வு, வளர்ச்சி, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, நியாயத் தீர்ப்பு, நித்திய வாழ்வு என்ற வரிசையில்தான் இருக்க வேண்டும். நடுவில் சொன்ன வளர்ச்சியில் சரீர சுகமோ, ஆசீர்வாத செய்திகளோ அல்லது செழிப்பு உபதேசமோ இடம் பெறுவதில் தவறில்லை. ஆனால் இன்று அநேகர் இந்த இரண்டை மட்டும் நன்றாகச் செய்துவிட்டு முன்னால் சொன்ன உபதேசங்களைக் குறைத்துக்கொண்டு, கடைசியில் சொன்ன உபதேசங்களை முற்றிலுமாக விட்டுவிடுகிறார்கள். இதைப் பவுல் ரோமருக்கு எழுதி முடிக்கும் பொழுது 'அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்-யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து(தங்கள் சொந்தப் பசிக்கு சேவை செய்கிறார்கள்). நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங் களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்'.

ஊழிய நேசன்: இந்த நேரங்கள் எங்களுக்கு ரொம்ப பிரயோஜனமாயிருந்துச்சி ஐயா, நானும் என்னுடைய ஊழியத் துல அநேக காரியங்களைப் புரிஞ்சிக்கிட்டேன்... (*ஆலயப் பிரியன் குறுக்கிட்டு*)

ஆலயப்பிரியன்: நாம் அறிய வேண்டிய காரியங்கள் இவ்வுளவு இருக்கு என்று நினைக்கும் பொழுது திகைப்பாக இருக்கிறது. ஊழியப்பிரியனைப் பார்த்து நானும் இனிமேல் உங்க கூட கிராம ஊழியத்திற்கு வருகிறேன் அண்ணன்.

(மூவரும் ஜெபித்தல்)

**Mr. Issac Kamalash** - முற்றும்

தூத்துக்குடி மாவட்டத்தி லுள்ள கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் ஊரான நாசரேத்தில் தீவிரமாகப் பணியாற்றி சுவிசேஷத்தை பிரசங்கித்த மேலை நாட்டு மிஷனரிகளுள் முக்கியமானவர் ஆர்தர் மர்காஷியஸ். 1975ம் ஆண்டு இங்கு வந்த ஆர்தர் மர்காஷியஸ் சான்பத்து என்ற கிராமத்தில் பணியாற்றினார். அந்தக் கிராமமே இன்று நாசரேத் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஊரில் பிறந்து கிறிஸ்தவப் பள்ளியில் படித்து நல்ல வேலையில் அமர்ந்தவர் தான் திரு. சகாயம் என்பவராகும். கூட்டுறவுத்துறையில் பணியாற்றி வந்த அவர், நல்லம்மாள் என்ற பெண்ணைத் திருமணம் செய்து வேலையினிமித்தம் விருது நகரில் வசித்துவந்தார். திருமதி. நல்லம்மாள் ஆசிரியையாகப் பணியாற்றிவந்தார். இவர்களுக்கு ஆண்டவர் மூன்று குழந்தைச் செல்வங்களை கொடுத்திருந்தார். முதல்மகன் தாம்ஸன், இரண்டாவதுமகள் சுசீலா கடைசி மகன் வில்சன்.

மகள் சுசீலா விருதுநகரில் உள்ள



தங்கம்மாள் பெரியசாமி என்ற அரசாங்கப் பள்ளியில் கல்விக்கற்று வந்தார். பள்ளி இறுதி படிப்பிற்குப்பின் அந்நாட்களில் அநேக பெண்களை மேற்படிப்பிற்குப் பெற்றோர் அனுப்புவதில்லை. ஆனால் சுசீலாவின் பெற்றோர் அவரைப் பாளையங்கோட்டையில் உள்ள சாரா டக்கர் கல்லூரியில் படிக்க வைத்தனர். தன்னுடைய பட்டபடிப்பை வெற்றியாக முடித்த அவரை சென்னையில் உள்ள கிறிஸ்டோபர் ஆசிரியர்பயிற்சிப் பள்ளியில் சேர்த்தனர். அவருடைய தாயார் ஓர் ஆசிரியராக இருந்தபடியால் பெண்களுக்கு இது ஒரு நல்ல வேலை என எண்ணி அங்கே சேர்த்தனர். அந்தப் படிப்பையும் வெற்றியாக சுசீலா முடித்தார். ஆண்டவருடைய கிருபையால் சகோதரி. சுசீலாவிற்குப் பாளையங்கோட்டை சாரா டக்கர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணி கிடைத்து அங்கு வேலையில் அமர்ந்தார்கள். இங்கு பணியாற்றி வந்த திருமதி. டெய்சி பால்நடத்திய ஜெபக்குழுவில் பங்கு பெற்று தான் தேவனுடைய பிள்ளை என்ற நிச்சயத்தைப் பெற்று கிறிஸ்துவில் வளர்ந்துவந்தார்கள்.



இடையன் குடியைச் சார்ந்த திரு. மாசிலாமணி திருமதி. பரிமளம் அவர்களின் மகன் திரு. பேட்ரிக் ஜோஷ்வா பாளையங்கோட்டையில் உள்ள செயிண்ட் ஜாண்ஸ் கல்லூரியில் இளங்கலை பட்டத்தையும், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தனது முதுகலை பட்டத்தையும் முடித்து வாலிப நாட்களில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருந்தபடியால் மாணவர்கள் மத்தியில் படிக்கும் போதே பணியாற்றி வந்தார். செயிண்ட் ஜாண்ஸ் கல்லூரியில் தேவனுடைய பிள்ளைகளாக ஒன்றுக் கூடி ஜெபித்தும் வந்தனர். கல்லூரி முடித்து வெளி சென்ற பிறகும் பழைய மாணவர்கள் ஜெபக்குழு என்று ஆரம்பித்து ஜெபித்தும் வந்தார்கள். மிஷனெரிப் பணி தமிழகத்தில் வளர்ந்துவரும் நாட்களில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் அதிகம் ஈடுபட்டு வந்தார்கள். திரு. பேட்ரிக் ஜோஷ்வாவின் தாயார் நன்றாக ஜெபிக்க கூடியவர்கள், அதேபோன்ற ஜெபிக்கும் வரத்தை இவரும் பெற்றிருந்தார். தன்னுடைய முதுகலைப்பட்டத்தை முடித்துவுடன்ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் (LIC) நல்ல வேலை கிடைத்து பணியாற்றி வந்தார். இவர்கள் இருவரின் திருமணமும் சிறப்பாக விருதுநகர் தேவாலயத்தில் வைத்து , 1964 ம் ஆண்டு நவம்பர் 18ம் நாள் நடைபெற்றது.



## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணியில் ஊழியம்

திரு. பேட்ரிக் ஜோஷ்வா (LIC) விரிவாக்க அதிகாரியாக கடம்பூரில் பணியாற்றி வந்தார். திருமணத்திற்குப் பின் கடம்பூரில் ஓர் அழகிய வீட்டில் வசித்து வந்தனர். திரு.பேட்ரிக்ஜோஷ்வா உலகப்பணிகளுடன் தேவனுடைய ஊழியத்தையும் செய்து வந்தார்கள். அவர்களுக்குக் கடம்பூர் அருகே சிவலிங்கபுரத்தில் உள்ள ஒருசிறு ஆலயத்தில் உபதேசியாராகப் பணியாற்ற வாய்ப்புகிடைத்தது. குடும்பமாக அந்தப் ஊழியத்தைச் சிறப்பாக செய்துவந்தார்கள். அதன்பின்புதிரு. பேட்ரிக் ஜோஷ்வாவிற்குக் கோவில்பட்டிக்கு மாற்றப்பட்டு, விரிவாக்க மேலாளர் என்ற உயர்பதவி கொடுக்கப்பட்டது. குடும்பமாக கோவில்பட்டியில் ஒரு வீட்டில் வசித்து வந்தனர். அவர்களுக்கு கார் மற்றும் போன் வசதிகளும் கொடுக்கப்பட்டன. இவ்வாறு சமுதாயத்தில் ஒரு நல்ல அஸ்தஸ்துடையவராய் கோவில்பட்டியில் வாழ்ந்து வந்தார்கள். தன் கணவனுக்கு உறுதுணையாக இருந்து சகோதரி சுசீலா குடும்பத்தை நன்றாக கவனித்து வந்தார்கள். அவர்கள் கடம்பூரில் பணி யாற்றும் போது தேவன் அவர்கள் திருமண வாழ்வை ஆசீர்வதித்து முதல் ஆண்மகனைக் 1965ம் ஆண்டு நவம்பர்23ம் தேதி கொடுத்தார். அவனுக்கு ஷாலோம் தேவபாலன் என பெயரிட்டு வளர்த்துவந்தார்கள். தேவனுடைய கிருபையால்இரண்டாவது பிள்ளையாகஜிம் எலியட்(23. 3. 67) என்ற மகனும், 3 வது

மகள் சபீனா மோனிக்கா 1968ம் ஆண்டு ஜனவரி 10ம் தேதி பிறந்தாள். பின்பு கடைசி குமாரனாக (10.8.71) பிராங்கோவையும் பெற்றெடுத்தார்கள். வேதம் வாசித்து குடும்பமாக ஜெபிப்பதிலும் பிள்ளைகளைக் கிறிஸ்துவின் பாதையில் நடத்துவதிலும் அதிக நேரத்தைத் திருமதி சுசீலா கொடுத்து குடும்பத்தை நன்றாக நடத்தி வந்தார்கள். 1966ம் ஆண்டு முதல் திரு.பேட்ரிக் ஜோஷ்வா நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் கௌரவ நிதிக் காவலராகக் செயல்பட்டு வந்தார்கள். திரு.பேட்ரிக் ஜோஷ்வா அவர்களுக்கு வீரபாண்டியன் பட்டணத்திற்குப் பணிமாற்றுதல் ஆனபடியால் குடும்பமாக அங்கு சென்று வசித்து வந்தனர்.

<u>முழுநேரப் பணிக்கு அழைப்பு</u>

1978ம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் ஏற்பட்ட தேவையினிமித்தம் திரு. பேட்ரிக் ஜோஷ்வா தன்னுடைய வருங்கால வைப்பு நிதி ரூ 1 இலட்சத்தை அன்றைய நாளின் மிக அவசர தேவைக்காக நண்பர் சுவிசேஷ ஜெபக் குழுவிற்குக் கொடுத்துவிட்டார்கள். மற்றும் நிதிப் பற்றாக்குறையைச் சரிசெய்ய தன்னுடைய காரை விற்று பணம், சேமிப்பு அனைத்தையும் கொடுத்துவிட்டார்கள். முழுநேரப் பணியான பொதுச்செயலர் பதவி ஏற்று வழிநடத்த அழைப்பு வந்தது. கணவன் மனைவி இருவரும் சேர்ந்திருந்து ஜெபித்தப் பின் தன்னுடைய மேலாளர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு முழுநேரப் பணியில் 1978, ஜனவரி மாதம் முதல்தேதி முதல் பொதுச்செயலர் பொறுப்பை ஏற்று பணியாற்றிவந்தார். பிள்ளைகளின் எதிர்காலம், கல்வித் தேவைகள், குடும்பத் தேவைகள் போன்ற பல நெருக்கடியான சூழ்நிலைகளிலும் தன்னை அழைத்த ஆண்டவர்மீது மட்டும் நம்பிக்கைவைத்து முன்னேறினர். இதுவரை அவர்கள் வாங்கி வந்த சம்பளத்தில் ஒருசிறு பகுதியே நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் ஊதியமாகக் கொடுக்கப்பட்டது. எனவே திருமதி. சுசீலா அதற்குள்ளாகவே தன்வீட்டு பட்ஜெட்டைச் சுருக்கிக் கொண்டார்கள். இவ்வாறு அவர்கள் விசுவாசம் சோதிக்கப்பட்ட நாளிலும் மன ரம்மியமாக வாழக் கற்றுக்கொண்டு அதைத் தங்களது பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுத்தார்கள்.

திருமதி சுசீலா மிஷனெரி பணிகளுக்காகப் பெண்களைக் ஊக்கப்படுத்தி பெண்களாக கூடி ஜெபிக்கும் ஒரு ஜெபக்குழுவை அயனாவரத்தில் திருமதி. லில்லி ரூபன் வீட்டில் ஆரம்பித்து நடத்தி வந்தார்கள். அது மட்டுமல்லாதுமற்ற பெண்களுடன் சேர்ந்து மருத்துவமனை சென்று அங்குள்ள நோயாளிகளைச் சந்தித்து ஜெபித்து வந்தார்கள். ஒவ்வொரு 2வது செவ்வாய் கிழமை வேத ஆராய்ச்சி கூடுகையும், 3வது செவ்வாய் உபவாச ஜெபம் மற்றும் 4 வது செவ்வாக்கிழமை தோறும் வீடு சந்திப்பு ஊழியம் எனப் பெண்கள் மத்தியில் பணியாற்றி வந்தார்கள். அந்நாட்களில் பெண்களுக்கு என தனி ஊதியம் நண்பர்சுவிசேஷ ஜெபக்குழுவில் இல்லை. ஒரே குடும்ப ஊதியம் மட்டுமே. ஒரு சிறிய உதவித்தொகை மட்டும் துணைவியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது .

<u>இறுதி நாட்கள்</u>

1993ம் ஆண்டு செப்டம்பர் மாதம் திருமதி. சுசீலாவிற்கு வயிற்றில் கேன்சர் என்று கண்டறியப்பட்டது. குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் இது அதிர்ச்சியாக இருந்தது. உடனே அவர்களை வேலூர் கிறிஸ்துவ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அனைத்து மருத்துவச் சிகிச்சையும் செய்யப்பட்டது. திருமதி. சுசீலா விசுவாசத்தில் தளராமல் தன்னைப் பார்க்க வருபவர்களை உற்சாகப்படுத்தி அனுப்பினார்கள். யார் வந்தாலும் ஊழியத்தைக் குறித்தே பேசுவார்கள். கடைசி நாட்களில் சென்னை குமரன் நகரில் வசித்து வந்தார்கள். அந்தப் பகுதியில் ஓர் ஆலயம் எழும்ப வேண்டும். இது குமாரனின் நகராக மாற வேண்டும் என்பது அவர்களுடைய ஆவல். அந்தப் பகுதியில் வாழ்ந்த குடிசைவாழ் மக்கள் மத்தியில் தீவிர சுவிசேஷப் பணியும் செய்யப்பட்டு வந்தது. 1994ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ம் தேதி திருமதி சுசீலா தேவ அழைப்பை ஏற்று விண்ணுலகம் சென்றார்கள். தேவன் கொடுத்த ஓட்டத்தை வெற்றியாக முடித்த அவர்களுக்காகத் தேவனைத் துதிப்போம்.

ஒரு சிலர் தான் தன் ஓட்டத்தை வெற்றியாய் முடித்திருக்கிறார்கள். எப்படியென்றால் இவர்கள், விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கி ஓடினார்கள். யாரை நோக்கி, எதைநோக்கி ஓடிக்கொண்டிருக்கிறாய் நீ? கரைந்திடும் உப்பாக வாழ்நாளெல்லாம் இயேசுவுக்காய் மறைந்து வாழ, அவர் சித்தம் செய்திட, இயேசுவின் நாமம் மேலோங்கிட உன் சிறந்த வாழ்வை அர்ப்பணித்திடு.



## மிஷனெரி சரிதை

# திருமதி. சுசீலா பேட்ரீக் ஜோஷ்வா

கடந்த மாத தொடர்ச்சி...

## அன்பே பெரியது

வாழ்வின் உண்மையான பொருள் அன்பு செலுத்துவதிலும், அன்பு செலுத்தப்படுவதிலுமே பொதிந்துள்ளது. - அன்னை தெரஸா

ஒவ்வோர் ஆசிரியருக்கும் இருக்க வேண்டிய தலையாய பண்பு அன்பு ஒன்றுதான். என் அனுபவத்தின் வழி கூற விழைகின்றேன். பண்டாரஞ் செட்டி விளையிலுள்ள மேரி ஆன் பெஸ்ட் உயிர்நிலைப் பள்ளியில் 09-07-79 அன்று தமிழ் முதுகலை ஆசிரியராகப் பதவி ஏற்றேன். அந்நாள் என் வாழ்வில் இன்று வரை மறக்க முடியாத நாளாக அமைந்து விட்டது.

தலைமையாசிரியர் அறிவுரைப்படி பதினோராம் வகுப்பிற்குப் பாடம் நடத்தச் சென்றேன். வகுப்பில் நுழையும் போதே, மெலிந்த உருவத்தோடு சணலால் கட்டப்பட்ட மூன்று ஜடைகளோடு மாறுபட்ட சிரிப்போடு ஒரு மாணவி தென்பட்டாள். பாடம் நடத்திவிட்டு அமரச் சென்ற சென்ற நாள் கீழே விழுந்து விட, கை கொட்டி சிரித்தாள். அந்த மாணவி அவள் பெயர் முத்துக்கனி என்பதையும் தெரிந்து கொண்டேன்.

அவளுடைய பின்பலத்தை ஆராய்ந்து பார்த்த போது, அவளுடைய தகப்பன், தாயைக் கொன்று விட்டு சிறையில் இருப்பதாகவும், தாய் இறந்த நிலையில் உற்றார், உறவினர் ஒதுக்கி கைவிட்ட நிலையில் இப்பள்ளிதான் அவளுக்கு அன்பென்றும் ஆதரவுக் கரம் நீட்டியிருக்கிறது என்பதும் தெரிய வந்தது.

வாழ்வின் உண்மையான பொருளான அன்பை அவள் அனுபவிக்கவில்லை. அன்பு செலுத்த யாருமில்லை என்ற ஏக்கம் அவளை வாட்டியது. மெல்ல மெல்ல அவளிடம் பேசி, அன்பு செலுத்த ஆரம்பித்த நான் இயேசுவின் அன்பையும் எடுத்துக் கூறினேன். அன்பு என்றும் ஆயுதம் அவளிடம் கிரியை செய்ய ஆரம்பித்தது. அன்பிற்காக ஏங்கிய உள்ளம் இப்பொழுது மற்றவரிடத்திலும் அன்பு செலுத்த ஆரம்பித்தது.

இரண்டு ஆண்டுகளில் முத்துக்கனி இயேசுவின் அன்பைப் பகரும் கனியாக மாறி விட்டாள். பன்னிரெண்டாம் வகுப்பை முடித்தபின் பாளையங்கோட்டையிலுள்ள VBSஇல் பாக்கியத்தாய் அக்காவின் உதவியாளராக பணியாற்றினாள். பின் திருமணம் முடிந்து சென்னை வண்ணாரப் பேட்டையில் இரண்டு மகன்களோடு குடும்பமாக வாழ்கிறாள்.

அன்பு என்னும் தலையாய பண்பு ஆசிரியப்பணி செய்யும் ஒவ்வொருவருக்கும் தேவை. அன்பு என்றும் கருணை உள்ளம் இருந்தால் மட்டுமே மாணவர்களைக் கவர்ந்திழுக்க முடியும். அவர்களின் முன் மாதிரியாக விளங்க முடியும். நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க முடியும்.

- திருமதி. லில்லி. T. ஸ்டுவர்ட்

## ஆசிரியர் தினம்

கண்டிக்கும் ஆசிரியர் மாணவனை கறையேற்றி விடுவார் என்பது பழமொழி. ஆனால் இன்றைய நிலை கண்டிக்கும் ஆசிரியர் கம்பி எண்ணப் போய்விடுவார் என்ற நிலை இந்நிலை ஏன்?

சீரழிந்து போன இளைய தலைமுறையை சீர்திருத்த தேவை சிறப்பான ஆசிரியர்கள். ஆசிரியர் பணி அறப்பணி. அதற்கு உன்னை அர்ப்பணி. அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களே இன்றைய தேவை! மாறிப் போய்விட்ட மாணவர்களின் மனநிலை அறிந்து, அன்புடன் கண்டித்து திருத்த தேவை நல்மனம் படைத்த ஆசிரியர்கள். கல்லை செலுக்கி சிலையாகும் சிற்பியை போன்று, சினம் கொண்டு சீறி அலைகின்ற சிறார்களை, செலுக்கி நற்பண்புகளை வெளிக் கொண்டுவர சீரிய சிந்தையுள்ள ஆசிரியர்களால் மட்டுமே முடியும். வருங்கால ஆசிரியப் பெருமக்களே சற்றே சிந்தியுங்கள். நீங்கள் கற்ற கல்வியை, சின்னா பின்னமாக போய் கொண்டிருக்கும் மாணவச் செல்வங்களின் வாழ்க்கையை சீர்திருத்த சிறப்பான பணி ஆற்ற இளைய தலைமுறை ஆசிரியர்களே வீறு கொண்டு எழும்புங்கள்.

தற்போதைய சூழ்நிலையில் மாணவர்களை அன்புடன் நேசித்து அறிவுரை வழங்கும் ஆசிரியர்கள் தேவை. பட்சபாதம் கட்டாத நல்லாசிரியர் தேவை. ஒவ்வொரு மாணவனின் தனித் திறமைகளை தேடி கண்டுபிடித்து ஊக்கமளிக்கும் உண்மை ஆசிரியர் தேவை.

இப்படிப்பட்ட ஆசிரியர்களே டாக்டர் இராதாகிருஷ்ணனின் நல்லாசிரியர் விருது பெற தகுதியானவர்கள். இளைஞனே யுவதியே நல்ல போதகராம், இயேசுவும் உன்னை இப்படிப்பட்ட ஆசிரியப்பணிக்கு அழைக்கிறார். ஆசிரிய தேவையுள்ள வடதேசம் நோக்கி செல்வாயா? சிந்தித்து செயல்படுவாயா?

**Prof.** கிருபாகரன்

# ஆசிரியர் பணி ஓர் அலசல்






# அக்டோபர் மாத வாலிபர் கூடுகைகள்

## தயவாய் ஜெபியுங்கள்

01-05 - ஆந்திரா பணித்தள விஜயம்

04 - வாலிபர் கூடுகை - ஆலங்குளம்

08,09 - தன்னார்வ வாலிபர் & இளம் வாலிப தலைவர்கள் பயிற்சி முகாம் - சென்னை

09 - வாலிபர்/இளம் வாலிபர் கூடுகை - கொரட்டூர்

22, 23 - கர்நாடக மாநில வாலிபர் முகாம் - பெங்களூர்

27 - வாலிபர் கூடுகை - ராஜபாளையம்

29 வாலிபர் கூடுகை - நங்கநல்லூர்

# தயாராக உள்ளது...



## 2019 | 2020 | 2021

வருடங்களுக்கான கேரீத் ஒவ்வொரு வருடத்திற்கான புத்தகமாக தமிழிலும், ஆங்கிலத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்கள் தனிப்பட்ட மற்றும் ஜெபக்குழுக்களில் பயன்படுத்தி, ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறுவதற்கு உதவியாக இருக்கும். இதனுடைய விலை ரூபாய் 100/- (தபால் செலவு தனி), அம்பத்தூரில் அமைந்துள்ள நமது அலுவலகத்தில் கிடைக்கும். உங்கள் பிரதிக்கு முந்துங்கள், வாங்கி பயனடையுங்கள், நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

இளைஞர் பிரிவின்

# பொன்விழா ஆண்டு
## சிறப்பு வாலிபர் முகாம்
### இளைஞர் பாளையம் – 2023

CELEBRATING 50th anniversary

ஆயத்தமாகீர்
ஆண்டவருடைய மகத்துவத்தை
கொண்டாட

**நாள்:**
ஜனவரி
14,15,16 2023
சனி காலை 7 மணி முதல்
ஞாயிறு மதியம் 2 மணி வரை

**இடம்:**
ஜெயராஜ் அன்னபாக்கியம்
சி.எஸ்.ஐ பொறியியல் கல்லூரி வளாகம்,
மர்காஷியஸ் நகர், நாசரேத்,
தூத்துக்குடி மாவட்டம்.

**துதிக்க**

- 50ஆண்டுகால வாலிபர் பணிபிரிவை நடத்த தேவன் பாராட்டிய கிருபைக்காக...
- 1973 தூத்துக்குடி முயல் தீவில் வைத்து நடைபெற்ற இளைஞர் பாளையம் மற்றும் அதை தொடர்ந்த மிஷன் எழுப்புதலுக்காகவும் அதை தேவ ஒத்தாசையால் நடத்திய நம் இயக்க முன்னோடி அண்ணன்மார்களுக்காக...
- வாலிபர் பிரிவின் கூடுகையின் மூலம் புறப்பட்டுச் சென்ற மிஷனெரிகளுக்காக...
- வாலிபர் பிரிவில் பணிபுரிந்த முழுநேர மிஷனெரிகள் மற்றும் தன்னார்வ தலைவர்களுக்காக...
- தேசமெங்கிலும் வாலிபர்கள் மத்தியில் செய்த இறைப்பணிக்காக...

**முகாமின் குறிக்கோள்:**

- 1000 வாலிப யுவன், யுவதிகள்பங்குபெற...
- 100 புதிய ஜெபக்குழுக்கள் இளைஞர்கள் மத்தியில்உருவாக்க...
- 50 பேர் முழுநேர மிஷனெரியாக உடனடியாக புறப்பட்டுசெல்ல...
- பங்கு பெறும் அனைவரும் இரட்சிப்பின் நிச்சயத்தையும், மிஷனெரி தரிசனத்தையும் பெற்றுசெல்ல...

**முகாமிற்கான ஜெபக்குறிப்புகள்**

- ஆவியானவரின் வழிநடத்துதலுக்காக, ஏற்றகால சூழ்நிலைக்காக...
- முகாமின் வளாகத்தை தேவன் ஆசீர்வதிக்க...
- முகாமிற்கான செய்தி கொடுக்க இருக்கும் நம் இயக்க அண்ணன்மார்கள், மிஷனெரிகள் மற்றும்சிறப்புசெய்தியாளர்களுக்காக...
- முகாமிற்கான ஆயத்தப்பணிகளை செய்யவிருக்கும் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தன்னார்வதலைவர்களுக்காக, அனைவருக்குள்ளும் ஒருமனம்நிலவ...
- முகாமில் பங்குகொள்ளவிருக்கும் வாலிபர்களை தேவன் ஆயத்தப்படுத்த...
- முகாமின் குறிக்கோள் நிறைவேற...
- முகாமின் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட...

**குறிப்பு**

12 ஆம் வகுப்புக்கு மேல் படிக்கும் கிறிஸ்தவ அல்லது கிறிஸ்துவின் மேல் வாஞ்சையுள்ள வாலிப ஆண்கள்,பெண்களுக்குமட்டுமே.

13-01-23மாலை6மணிக்கு ஆயத்தகூட்டம்மற்றும்முகாம்பதிவு ஆரம்பமாகும்.

---

# Friends Missionary Prayer Band

# Youth Wing

### Two Days Leadership Camp

Only
Youth & Teens Wing
Ministry involved Leaders

In Greater plan
# UNlimit
beyond your thoughts...
Jer 32 : 27

Registration Fee
Rs.200

Resource Persons

**Rev. John Berlin** - General Secretary (FMPB)
**Rev.Emmanauel Ranjith singh** Div Sec (FMPB)
**Eva. Santheep Daniel** Chennai
&
**FMPB Navodaya Team**

Check In - Saturday 7 am
Check Out - Sunday 2 pm

OCTOBER
8&9 2022
SATURDAY, SUNDAY

**Salvation Army HRD Center,**
Perianna Maistry St, Periyamet, Ch-7
**Land Mark :** Madras Veterinary College, Vepery

*Stay will be arranged*

*Pray!!! Plan!!! Participate!!!*

**9445040148, 9444755896**